THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY * TANJORE. *
RECEIVED
2 5. MAY 1931
100

சங்கராகிரந்தாவலி. முதற்புத்தகம்.

ஓம் தத்ஸத்ப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய

**ஸ்ரீ சங்காராசாரியஸ்வாமிகள்**

அருளிச்செய்த

# அபரோக்ஷாநுபூதி.



96
GL No
14546

இது

தஞ்சைமாநகரம்

மகா-ா-ா-ஸ்ரீ வெ. குப்புஸ்வாமிராஜு

என்னும் பூர்வாசிரமநாமம்பூண்ட,

ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள் அவர்கள்

இயற்றிய தமிழுரையுடன்

தஞ்சை

"ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர அச்சுக்கூடத்திற்"

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

பிரபவ-௵ அற்பிசி-௴

1927.

*Copy-Right Registered.*

இதன் விலை] [அணா ௮.

இப்புத்தகம் 1867-வது ஆக்ட்டு 25-வது பிரிவுப்படி
ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

புதுச்சேரி கவர்ண்மெண்டிலும்,
ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

000003



ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திர தர்மவாசகசாலை, புஸ்தகசாலை & பிரஸ்,
வடக்குராஜவீதி, தஞ்சாவூர்.

## விற்பனைக்கு தயாராயுள்ள புத்தகங்கள்.

### வேதாந்தநூல்.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பஞ்சதசி (பஞ்சதசப்பிரகரணம்) வாலியூம் 1 & 2 ... | 9—0—0 |
| 2. | * ,, விருத்திப்பிரபாகரம் ... ... ... | 5—0—0 |
| 3. | * ,, விசாரசாகரம் ... ... ... | 3—4—0 |
| 4. | ,, விசாரசந்திரோதயம் (4-ம் பதிப்பு) ... ... | 1—8—0 |
| 5. | ,, பாலபோதம் ... ... ... | 1—8—0 |
| 6. | ,, விருத்திரத்நாவலி ... ... | 0—12—0 |
| 7. | நாநாஜீவவாதக்கட்டளை குறிப்புரையுடன் (2-ம் பதிப்பு) ... | 0—4—0 |
| 8. | ஷை (செய்யுள்) ... ... | 0—3—0 |
| 9. | விவேகசிந்தாமணி (வேதாந்தபரிச்சேதம்) ... ... | 0—6—0 |
| 10. | ஸ்ரீ சங்கரநீலகண்டாசார்ய சம்வாதம் ... ... | 0—6—0 |

### யோகநூல்.

| | | |
|---|---|---|
| 11. | ஹடயோகப்பிரதீபிகை ... ... ... | 2—0—0 |
| 12. | சிவயோகப்பிரதீபிகை ... ... ... | 0—10—0 |

### சூத்திரம்.

| | | |
|---|---|---|
| 13. | அட்டாங்கயோகசூத்திரம் — கலிகோபைண்டு ... | 1—0—0 |
| | அட்டாங்கயோகசூத்திரம் — ராப்பர்பைண்டு ... | 0—10—0 |
| 14. | நாரதபக்திசூத்திரம் ... ... ... | 1—8—0 |
| 15. | அஷ்டாத்யாயி (பாணினி வியாகரணம் சூத்திரமும் தமிழ் உரையும்) அச்சில் | |

### சங்கரகிரந்தாவலி.

| | | |
|---|---|---|
| 16. | அபரோக்ஷாநுபூதி — ச. கி. 1-ம் புத்தகம் ... ... | 0—8—0 |
| 17. | ஆத்மபோதமும் தத்துவபோதமும் (2-ம் பதிப்பு) ச. கி. ... 2. | 0—8—0 |
| 18. | ஸ்ரீ பஞ்சீகரணமுதலியன 27-புத்தகங்கள். ச. கி 3 ம புத்தகம் | 1—0—0 |
| 19. | ,, குருபுஜங்கஸ்தோத்திரம் ... ஷை 4-ம் ஷை ... | 0—4—0 |
| 20. | பிரச்நோத்திர ரத்நமாலை ... ஷை 5-ம் ஷை ... | 0—2—0 |

### தர்க்கம்.

| | | |
|---|---|---|
| 21. | தருக்ககௌமுதி (நியாயபதார்த்தத்துடன்) ... ... | 0—10—0 |

### ஞானநூல்.

| | | |
|---|---|---|
| 22. | சிவஞானபோதம் (தத்துவப்பிரகாசிகை உரையுடன்) ... | 1—8—0 |
| 23. | ஞானவாசிட்ட வசனம் (வைராக்கியப்பிரகரணம்) ... | 1—4—0 |

### உபநிடதம்.

| | | |
|---|---|---|
| 24. | கைவல்யோபநிடதம், அமிர்தபிந்தூபநிடதம், சுகரகசியோபநிடதம், ஸ்கந்தோபநிடதம் (செய்யுள்) ... ... | 0—5—0 |
| 25. | தத்துவமஸிமகாவாக்கியவுபதேசம் (உபநிஷத்) 3-ம் பதிப்பு ... | 0—3—0 |
| 26. | சுருதிஷட்லிங்கசங்கிரகம் ... ... ... | 0—8—0 |
| 27. | ஸ்ரீ நந்திகேசுவரகாசிகை ... ... ... | 0—4—0 |

### கீதைக்கோத்து.

| | | |
|---|---|---|
| 28. | உத்திரகீதை கீ. கொ. (1-ம் புத்தகம், ... ... ... | 0—6—0 |
| 29. | ஸ்ரீராமகீதை ஷை (2-ம் புத்தகம், ... ... ... | 0—6—0 |

000004



30. குருகீதை ஷை (3-ம் புத்தகம்) 2-ம் பதிப்பு } கலிகர் ... 1—4—0
ராப்பர் ... 1—0—0
31. தேவீகீதை ஷை (4-ம் புத்தகம்)... ... ... 0—12—0
32. ஸ்ரீபகவத்கீதை, கர்மகீதை, சப்தசுலோகிகீதை கித்தான்பயிண்டு 1—4—0
33. கீதாசாரத்தாலாட்டு கீ. கொ. (6-ம் புத்தகம்)... ... ... 0—6—0

### மந்திரம்

34. சிவபஞ்சாக்ஷரவிளக்கம், ஸ்ரீராமமந்திரார்த்தம், கணேசஷோடசநாமஸ்தவம் }... 0—4—0
35. வைஷ்ணவ அஷ்டாக்ஷரமந்திரார்த்த சங்கிரகம் ... 0—2—0

### சரித்திரம்

36. ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கராசாரியர் சரித்திரம் (செய்யுள்) ... 0—3—0
37. ஷை ஷை சரித்திரசங்கிரகம் (வசனம்) ... 0—2—0
38. தஞ்சை ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள் திவ்ய சரித்திரமும் நான்மணிமாலையும் ... ... }... 0—8—0

### பிரம்மவிளக்கம்

39. ஸ்ரீ பிரஹ்மவிதாசீர்வாதபத்ததி ... ... ... 0—2—0
40. ,, பிரம்மநாமாவலி (செய்யுள்) ... ... ... 0—2—0
41. ஷை நாகரம் கார்டு ... ... ... 0—0—6

### அஷ்டோத்திரம்

42. ஸ்ரீ சங்கர வித்யாரண்யாஷ்டோத்திரசதநாமம், நாகரம், கிரந்தம், தமிழ் தனித்தனி .. ...... }... 0—2—0
43. ஸ்ரீ குர்வஷ்டோத்தரசதநாமாவலி, நாகரம், கிரந்தம், தமிழ் சேர்ந்தது ... ... }... 0—3—0

### ஸ்தோத்திரம்

44. ஸ்ரீ நாராயணஸ்தோத்திரம் - நாகரம் கார்டு ... ... 0—0—6

### ராமாயணம்

45. ஸ்ரீ நாமராமாயணமும், நாராயணஸ்தோத்திரமும், தமிழ் ... 0—1—0
46. காயத்ரீராமாயணம் - நாகரி ... ... ... 0—1—0
47. ஸ்ரீ ராமாயணசூர்ணிகை, நாகரி, தமிழ் தனித்தனி ... ... 0—1—0

### படம்

48. ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியர் படம்பெரிது ... ... 0—2—0
ஷை ஷை சிறிது ... ... 0—1—0
49. தஞ்சை ஸ்ரீ பிரம்மாநந்தஸ்வாமிகள் படம் பெரிது ... 0—2—0
ஷை ஷை சிறிது ... 0—1—0
50. சீதாதேவிக்கு ஹநுமார் கணையாழி கொடுத்த படம் ... 0—1—0

மானேஜர்
ஸ்ரீ சங்கரவிலாச சாரதாமந்திரம்,
வடக்குராஜவீதி தஞ்சாவூர்.

000005

உ

ஸ்ரீ கணேசாயநம:

# முகவுரை.

இக்கலியுகத்தில் சகல ஜீவர்களும் மிகத் துக்கமுடையவர்களாயிருத்தலால் எல்லோருக்கும் தம்முடைய துக்கம் நீங்கிவிடவேண்டுமென்னும் விருப்பமுண்டாகின்றது. ஆனால் சம்ஸார துக்கம் மந்திரௌஷதிமுதலியவற்றால் ஒரு க்ஷணம் நாழிகை மாசம் வருஷமென்றல் முதலியனவாக நியமிக்கப்பட்டகாலம்வரையில் நீங்குகிறது; மீண்டும் வாராதவண்ணம் அத்தியந்தமாக நீங்குகிறதில்லை. ஏனெனின், "तमेव विदित्वाऽतिमृत्युमेति नान्यः पन्था विद्यतेऽयनाय- அந்தப் பிரஹ்மத்தினையே அறிந்து மிருத்தியுவைக் கடக்கின்றான். அதனைக் கடத்தற்கு வேறு வழியில்லை" என்னும் எஜுர்வேதம் ஞானமே மோக்ஷமார்க்கமென்று கூறியிருக்கின்றது. ஆதலால் உலகினர் தம்துக்கமொழித்தற் பொருட்டு அவ்வுண்மைஞானத்தினை யுணருமாறு பரமகருணாநிதியாகிய பரமேசுவரன் இப்பூமியிலவதரித்து ஸ்ரீசங்கராசாரிய ரென்னும் காரணப்பெயரையே தமக்குப் பெயராகக்கொண்டு பிரஹ்மசூத்திரபாஷ்யாதி அநேக நூல்களைச் செய்து வேதத்தின் உண்மைப்பொருளை வெளிப்படுத்தினார். ஆனால் அவ்வாறு தாம் செய்த விரிந்த வேதாந்தநூல்களைப் பார்க்கச் சக்தியில்லாத மந்தமதியினராகிய ஆஸ்திகர்கள் எளிதிலுணருமாறு அபரோக்ஷாநுபூதி, ஆத்மபோதமுதலிய அநேகப் பிரகரணக்கிரந்தங்களை வெளிப்படுத்திருக்கின்றனர். அவையாவும் வியாக்கியானங்களுடன் ஆரியபாஷையி லிருத்தலால் அப்பாஷையைப் பயிலாத தமிழ்நாட்டு ஆஸ்திகர்களாகிய அதிகாரிகளும் அறிந்துய்யுமாறு அந்நூல்களை அவ்வாசாரியர்களது திருவாக்காகிய மூலசுலோகங்களுடன் தெளிவான ஓர் தமிழுரையும் சேர்த்து வெளியிடவேண்டுமென்று பலர் கேட்டுக்கொண்டமையால் அந்நூல்கள் "ஸ்ரீ சங்கரகிரந்தாவலி" யென்னும் பெயரால் பதிப்பிக்கப்பட்டுவருகின்றன. அவற்றுள், இம்முதற்புத்தகமான அபரோக்ஷாநுபூதி சுருதிவாக்கியங்களையே சுலோகமாகக் கொண்டுள்ளது. அதுபற்றியே பூர்வாசாரியர்கள்

தங்கள் நூல்களின் இதனைப் பிரமாணமாகக் காட்டியிருக்கின்றனர். இதனை முறையாகக் கற்கும் முமுக்ஷுக்கள் உடனே நிரதிசயாநந்தத்தை யடைதற் கையமில்லை. இவ்வபரோக்ஷாநுபூதி என்னூல் முன்னொருமுறை தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கினும், இப்போது இது முன்னினும் விளக்கமாய் ஸ்ரீ வித்தியாரண்யஸ்வாமிகளின் உரையை யநுசரித்து ஓருரையெழுதப்பட்டு குறிப்புரை மூலசுலோகங்களுடன் சுத்தமாய் இக்கிரந்தாவலியுடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டது. இவ்வாறு ஸ்ரீமதாசாரியர்களது மற்றைய நூல்களும் அச்சிடப்பட்டுவருகின்றன. இந்நூலில் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்ற முளவாயின் அவற்றைப் பெரியோர் பொறுப்பதோடு தயைசெய்து எனக்கு மறிவுறுத்துமாறு கேட்கின்றேன்.

சத்திய ஞான நந்தத் தனிப்பெரு முதலே யன்பாற்
றத்துவ வுணர்ச்சி தோன்ற சங்கரப் பெயராற் செய்த
மெய்த்திற நூல்க டம்மை மேவுமெய் யன்ப ரென்று
மெத்திறத் துயரு மில்பே ரின்பவீ டெய்தா நிற்பர்.

வெ. கு.

ஓம் தத்ஸத்ப்ரஹ்மணே நம:

# அபரோக்ஷாநுபூதி.

## மங்கலம்.

(அவதாரிகை.)

# अपरोक्षानुभूतिः

## मङ्गलाचरणम्.

(அ-கை.) இங்கு ஆசிரியர் இந்நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுத் தன்மனதிற் றனதிஷ்டதேவதையின் அநுசந்தானலக்ஷணமாகிய மங்கலத்தைச்செய்து, சீடர்களுக் குபதேசித்தற்பொருட்டு அதனை நூலி னாரம்பத்திற் கூறி, தான் செய்ய விரும்பியதைப் பிரதிஞ்ஞை செய்கின்றார்:—

श्रीहरिं परमानंदमुपदेष्टारमीश्वरं ।
व्यापकं सर्वलोकानां कारणं तं नमाम्यहं ॥ १ ॥

अपरोक्षानुभूतिर्वै प्रोच्यते मोक्षसिद्धये ।
सद्भिरेव प्रयत्नेन वीक्षणीया मुहुर्मुहुः ॥ २ ॥

எவ்வகை யுலகி னுக்கு மேதுவாம் பூர்ண வீசன்
அவ்வுப தேசி யாய வரியினைப் பரானந் தத்தைச்
செவ்விதின் வணங்கி முத்தி சேரவே செப்பு கின்றேன்
இவ்வகை யபரோ க்ஷாநு பூதியை யியற்று மேலோர்.

(இதன்பொருள்.) ஜடாஜடமாகிய எவ்வகை யுலகங்களுக்கும் காரணனும் வியாபகனுமான ஈசுவரன். அத்தகையவுபதேசஞ் செய்பவனாகிய பரமானந்த ஹரியைச் செவ்வையாக நமஸ்

000008



கரித்து, முமுக்ஷுக்களாகிய மேலோர்களால் முயன்று அடிக்கடி விசாரிக்கத்தக்க ஈண்டுக் கூறப்படு மியல்பினதாய அபரோக்ஷாநுபூதியை மோக்ஷமடைதற்பொருட்டுச் சொல்லுகின்றேன் என்றவாறு.

பிரயோஜனத்தைக் கருதாது மந்தனுக்கும் பிரவிருத்தியுண்டாகாதெனக் கருதியவராய், இந்நூலிற்குச் சர்வதுக்கநிவிருத்தியும் பரமாநந்தப்பிராப்தியுமாகிய பரம்புருஷார்த்தமே பிரயோஜனமா மென்பதை ஹரியைப் பரமாநந்தத்தை யென்னும் விசேடணங்களால் சூசிப்பித்தார். ஈசுவரனே உபதேசத்தான் ஆத்மஞானவாயிலாக அவித்தையை ஹரித்தலால் ஹரியெனப்படுவர். அரி யென்பது தற்பவம். எவ்வகை யுலகினுக்கும் ஏதுவாம் பூர்ணவீசன் என்பதனால் ஜீவப்பிரஹ்மைக்கியம் விஷயமா மென்பதும் சூசிப்பிக்கப்பட்டது. தத்துவமஸியாதி மாகாவாக்கிய சிரவணத்தாலுண்டாகும் பிரத்தியகபின்ன பிரஹ்மத்தை விஷயஞ் செய்யும் வித்தை அபரோக்ஷாநுபூதி யெனப்படும். அஃது உத்தமாதிகாரிகளுக்கு இந்நூலைப் பார்க்குமாத்திரத்தானே உதயமாகுதலான், இந்நூலுக்கும் அப்பெயரிடப்பட்டது.

(அ-கை.) மோக்ஷசாதனமாகிய வைராக்கியாதி நான்கினையும் அடையும் உபாயத்தினைக் கூறுகின்றார்:—

स्ववर्णाश्रमधर्मेण तपसा हरितोषणात् ।
साधनं प्रभवेत्पुंसां वैराग्यादिचतुष्टयं ॥ ३ ॥

தன் வருணாசிரம தர்ம (பிரஹ்மார்ப்பணமாகச் செய்யப்பட்ட கர்மாநுஷ்டானத்தினாலாகிய புண்ணிய) த்தாலும், தவசினாலும் (கிருச்சிர சாந்திராயணாதி பிராயச்சித்தத்தாலும்), பகவானைப் பிரியப்படுத்தலாலும் * வைராக்கியாதி நான்கு சாதனங்களும் புருஷர்களுக்குண்டாகின்றன. (௩)

---

* சாதன சதுஷ்டயங்களுக்கு விவேகாதிக்கிரமமாக ஒன்றற்கொன்றேதுவாந்தன்மை யிருக்கினும், வைராக்கியம் அசாதாரணகாரணமா மென்பதை விளக்குதற்பொருட்டு, அஃது ஆதியிற் கொள்ளப்பட்டதென்றறிக.

(அ-கை) அவ்வைராக்கியாதி நான்கும் எத்தன்மையன வெனக் கூறுகின்றார்:—

ब्रह्मादिस्थावरान्तेषु वैराग्यं विषयेष्वनु ।
यथैव काकविष्ठायां वैराग्यं तद्धि निर्मलं ॥ ४ ॥

பிரஹ்மாதி ஸ்தாவராந்தமான விஷயங்களில் *காக்கையின் மலத்திலிச்சையில்லாததுபோல இச்சையில்லாதிருத்தல் † நிர்மலமான வைராக்கியமாம். (சு)

(அ-கை.) இப்போது வைராக்கியத்திற்குக் காரணமாகிய விவேகத்தினைக் குறிக்கின்றார்:—

नित्यमात्मस्वरूपं हि दृश्यं तद्विपरीतगं ।
एवं यो निश्चयः सम्यक् विवेको वस्तुनः स वै ॥ ५ ॥

§ ஆத்மசொரூபம் (திருஷ்டா) நித்தியம்; திருசியம் (அநாத்மசொரூபம்) அதனின் விபரீதமுடையது (அநித்தியம்) என்னும் செவ்விதான நிச்சயம் எதுவோ, அதுவே வஸ்து விவேகமாம். (ரு)

---

* கழுதைமுதலியவற்றின் மலத்தில் ஓர்கால் ஒருவனுக்கு ஜ்வரமுதலியவற்றின் சாந்தியின்பொருட்டு இச்சை யுண்டாகும். காக்கை மலம் அங்ஙன மன்றாகலின் அஃது இங்குக் கொள்ளப்பட்டது. இது வாந்தியன்ன முதலியவற்றிற்கும் உபலக்ஷணமாம்.

† நிர்மல மென்பது வைராக்கியத்திற்கு விஷயங்களில் இச்சை யுண்டாகாதிருத்தல் எதுவாதலை யுள்ளடக்கிய விசேஷணமாம்.

§ இங்கு இஃதநுமானமாம்:—ஆத்மசொரூபம் நித்தியம்; திருஷ்டாவாகலான்; எது நித்திய மன்றோ அது திருஷ்டா வன்று; கடமுதலியவற்றைப்போல. (இது கேவலவெதிரேகி யேது.) அவ்வாறே அநாத்மசொரூபம் அநித்தியம்; திருசியமாகலின்; எது அநித்திய மன்றோ அது திருசிய மன்று; ஆத்மசொரூபம்போல. (இதுவும் கேவல வெதிரேகி யேதுவாம்.)

(அ-கை.) வைராக்கியத்தின் காரியமாகிய சமமுதலியவா றனையும் இலக்ஷியமாக்கிச் சமதமங்களின் இலக்ஷணத்தைக் கூறு கின்றார்:—

सदैव वासनात्यागः शमोऽयमिति शब्दितः ।
निग्रहो बाह्यवृत्तीनां दम इत्यभिधीयते ॥ ६ ॥

எப்போதும் வாசனை நீங்கி யிருத்தலாகிய இது சம மென்று சொல்லப்படும். வெளி விருத்திகளை யடக்குதல் தம மெனப் படும். (சா)

(அ-கை.) உபரதிதிதிக்ஷைகளின் இலக்ஷணத்தைக் கூறு கின்றார்:—

विषयेभ्यः परावृत्तिः परमोपरतिर्हि सा ।
सहनं सर्वदुःखानां तितिक्षा सा शुभा मता ॥ ७ ॥

பிரசித்தமான சத்தாதி விடயங்களினின்றும் நீங்குதல் எது வோ, அது பரமோபரதியாம். சகல துக்கங்களையும் சகித்தல் எது வோ, அது சுபமான திதிக்ஷை யென்று மதிக்கப்படுகின்றது. (எ)

(அ-கை.) சிரத்தைசமாதானங்களின் இலக்ஷணத்தைக் கூறு கின்றார்:—

निगमाचार्यवाक्येषु भक्तिः श्रद्धेति विश्रुता ।
चित्तैकाग्र्यं तु सल्लक्ष्ये समाधानमिति स्मृतं ॥ ८ ॥

வேதவாக்கியத்தினும் குருவாக்கியத்தினு முண்டாகும் விசு வாசம் சிரத்தை யெனக் கேட்கப்படுகின்றது. சத்தாகிய இலக்ஷி யத்திலுண்டாகும் சித்தைகாக்ரியம் (மனவொருமை) சமாதான மெனக் கேட்கப்படுகின்றது. (அ)

(அ-கை.) சமாதி ஆறன் காரியவடிவ முமுக்ஷுத்தன்மை யினைக் கூறுகின்றார்:—

संसारबंधनिर्मुक्तिः कथं स्यान्मे कदा विधे ।
इति या सुदृढा बुद्धिर्वक्तव्या सा मुमुक्षुता ॥ ९ ॥

ஈசா! சம்சாரபந்தநீக்கம் எனக் கெப்பொழு தெவ்வா றுண்டா மென்னும் நல்ல திடபுத்தி யெதுவோ, அது முமுக்ஷுத்துவமென்று சொல்லத்தக்கதாம். (௯)

(அ-கை.) வைராக்கியாதி சாதனசம்பன்னனால் செய்ய வேண்டியது யாதென்பதனைக் கூறுகின்றார்:—

उक्तसाधनयुक्तेन विचारः पुरुषेण हि ।
कर्त्तव्यो ज्ञानसिध्यर्थमात्मनः शुभमिच्छता ॥ १० ॥

முற்கூறிய சாதனங்களோடுகூடிய ஆத்மசுகத்தை விரும்பும் புருஷனால் ஞானசித்தியின்பொருட்டு விசாரம் செய்யத்தக்கதாம். (௰)

(அ-கை) அப்படியானால் விவேகம் அவசியமான தென்பது எதனாலெனத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

नोत्पद्यते विना ज्ञानं विचारेणान्यसाधनैः ।
यथा पदार्थभानं हि प्रकाशेन विना क्वचित् ॥ ११ ॥

பிரகாசமின்றி ஓரிடத்தும் பதார்த்தவிளக்க முண்டாத வில்லை. அதுபோல விசாரமின்றிப் பிற (கர்மாதி) சாதனங்களால் ஞான முண்டாத வில்லை. (௧௧)

(அ-கை.) அவ்விசாரம் எத்தன்மையதெனக் கூறுகின்றார்:—

कोहं कथमिदं जातं को वा कर्त्ताऽस्य विद्यते ।
उपादानं किमस्तीह विचारः सोऽयमीदृशः ॥ १२ ॥

யான் யார்? இவ்வுலகம் எவ்வாறுண்டாயிற்று? இதற்குக் கர்த்தன் யாவன்? இங்கு உபாதானம் யாது? என்னும் இவ்வியல்பினையுடையது விசாரமாம். (௧௨)

(அ-கை.) அப்படியானால் தேகாத்ம வாதியாகிய சார்வாகன்மதம் * பிரசித்தமாயிருத்தலின் ஆத்மவிஷயமான விசாரம் உண்டாகாதெனக் கூறுகின்றார்:—

---

* இத்தேகமே கர்த்தா சுகி என்றல் முதலிய சகலவிவகாரத்திற்கும் காரண மென்பது சகல ஜனங்களுக்கும் பிரசித்தமாம்.

नाहं भूतगणो देहो नाहं चाक्षगणस्तथा ।
एतद्विलक्षणः कश्चिद्विचारः सोयमीदृशः ॥ १३ ॥

பூதகணமாகிய * தேகம் † யானல்லன்; அவ்வாறே இந்திரியகணமும் யானல்லன்; ‡ இவற்றின் வேறாய $ ஒருவன் யான் என்னு மியல்பினையுடையது விசாரமாம். (கங)

(அ-கை.) நான் யாரென்று கூறி இப்போது இச்சகத்து எவ்வா றுண்டாயிற் றென்பதன் உத்தரம் கூறுகின்றார்:—

अज्ञानप्रभवं सर्वं ज्ञानेन प्रविलीयते ।
सङ्कल्पो विविधः कर्ता विचारः सोऽयमीदृशः ॥ १४ ॥

அஞ்ஞானத்தா லுண்டாகிய எல்லாம் (நாமரூப வடிவினதாகிய உலகம்) ஞானத்தாற் கெடுக்கின்றது; நாநாவித சங்கற்பம் கர்த்தாவா மென்னும் இயல்பினையுடையது விசாரமாம். (கச)

(அ-கை.) இப்போது உபாதானம் யாதென்பதன் நிர்ணயத்தினைக் கூறுகின்றார்:—

एतयोर्यदुपादानमेकं सूक्ष्मं सदव्ययम् ।
यथैव मृद्घटादीनां विचारः सोयमीदृशः ॥ १५ ॥

கட முதலியவற்றிற்கு மண் உபாதானமாதல்போல, இவற்றிற்கு (அஞ்ஞான சங்கற்பங்களுக்கு) ஏகமும் சூக்ஷ்மமும் அவ்

---

* "चैतन्यविशिष्टः कायः पुरुषः அறிவோடுகூடிய காயம் புருஷன் அதாவது ஆத்மா" என்னும் பிருகஸ்பதியின் சூத்திரத்தால் தேகாகாரமாகத் திரிந்த பிருதிவிமுதலிய நான்கு பூதங்களுமே ஆத்மாவென்று சார்வாகர் கூறுகின்றனர். அஃது இங்கு மறுக்கப்பட்டது.

† யான் யான் என்னும் உணர்ச்சிக்குப் பற்றுக்கோடாவது பிரத்தியகாத்மா.

‡ ஸ்தூலசூக்ஷ்மங்களின்.

$ ஜாதி முதலியன வின்மையால் மன வாக்குக் கெட்டாமை காட்டப்பட்டது.

வியயமு (குறைவு நிறைவில்லாதது) மாகிய * சத்து உபாதான (உற்பத்தி திதி நாசகாரண)மா மென்னு மியல்பினது விசார மாம். (கரு)

(அ-கை.) அப்படியானால் காரியகாரணபேதம் வாக்கின் தொழில்மாத்திரமாமாயினும் ஜீவப்பிரஹ்மங்களின் பேதம் வாஸ் தவமாமென் றாசங்கித்துக் கூறுகின்றார்:—

अहमेकोपि सूक्ष्मश्च ज्ञाता साक्षी सदव्ययः ।
तदहं नात्र सन्देहो विचारः सोऽयमीदृशः ॥ १६ ॥

யான் ஏகமும் சூக்ஷ்மமும் † ஞாதாவும் ‡ சாக்ஷியும் சத் தும் அவ்வியயமு மாவன்; ஆதலால் அது நான், இதிற் சந் தேகமில்லை யென்னும் இயல்பினையுடையது விசாரமாம். (கசு)

(அ-கை.) இதே ஜீவப்பிரஹ்மைக்கியத்தினை அஞ்ஞானத் தினைக் காட்டுதலால் திடப்படுத்துகின்றார்:—

आत्मा विनिष्कलो ह्येको देहो बहुभिरावृतः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १७ ॥

$ ஆத்மா நிஷ்களமும் ஏகமுமாம்; தேகமோ சுரோத்திர முதலிய வெகு கலைகளாற் சூழப்பட்டுள்ளது. அவ்விரண்ட ற்கும் (தார்க்கிகர் முதலியோர்) ஐக்கியத்தை அறிகின்றார்கள். இதனி (இப்படி யறிவதி)னும் வேறஞ்ஞானம் யாதுளது? (கஎ)

---

* மூன்றுகாலத்தினும் பொய்யென்று நிச்சயிக்கக்கூடாத பிரஹ்மம் சத்து.

† அகங்காராதிகளை விளக்குதலால் சேதனம் ஞாதா.

‡ இந்திரியார்த்தசம்பந்தமின்றியே நேரே காண்கின்றதாகலின் சாக்ஷி.

$ ஜாக்கிரமுதலிய சகல அவஸ்தைகளிலும் பொருந்தியிருத்தலால் ஆத்மாவாம். அதற்கந்நியமான தோன்றின்மையால் ஏகமாம்.

000014



(அ-கை.) பின்னும் விலக்ஷணத்தன்மையினைக் கூறுகின்றார்:—

आत्मा नियामकश्चान्तर्देहो बाह्यो नियम्यकः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १८ ॥

ஆத்மா நியாமகமும் (நடத்துவதும்) பஞ்சகோசங்களுள்ளிருப்பதுமாம்; தேகம் நியமிக்க (நடத்த)ப்படுவதும் புறத்திலுள்ளதுமாம். அவ்விரண்டற்கும் *.............. (௧௮)

(அ-கை.) வேறு விலக்ஷணத்தன்மையினையுங் கூறுகின்றார்:—

आत्मा ज्ञानमयः पुण्यो देहो मांसमयोऽशुचिः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ १९ ॥

ஆத்மா ஞானமயனும், புண்ணியரூபனு மாவன்; தேகம் மாம்சமயமும் அசுசியுமாம். அவ்விரண்டற்கும்.................(௧௯)

(அ-கை.) வேறு விலக்ஷணத்தன்மையினைக் கூறுகின்றார்:—

आत्मा प्रकाशकः स्वच्छो देहस्तामस उच्यते ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ २० ॥

ஆத்மா பிரகாசிப்பவனும் சொச்ச(தெளிவுள்ளவ)னுமாவன்; தேகம் தாமசமெனப்படும். அவ்விரண்டற்கும்...........(௨௦)

(அ-கை.) மீண்டும் வேறு விலக்ஷணத்தன்மையினைக் கூறுகின்றார்:—

आत्मा नित्यो हि सद्रूपो देहोऽनित्यो ह्यसन्मयः ।
तयोरैक्यं प्रपश्यन्ति किमज्ञानमतः परम् ॥ २१ ॥

ஆத்மா நித்தியமும் சத்துரூபமுமாம்; தேகம் அநித்தியமும் அசத்துமயமுமாம். அவ்விரண்டற்கும்..................(௨௧)

---

* இந்நூலில் இவ்வாறு புள்ளியிட்டிருக்கும் இடந்தோறும் அதற்கு முன்னுள்ள சுலோகப்பொருளின் ஈற்றிலுள்ள வாக்கியங்களைப் பொருந்துமாறு சேர்த்துப் படித்துக்கொள்ளுக.

(அ-கை.) ஆத்மாவின் சுவப்பிரகாசத்தன்மையினைக் கூறுகின்றார்:—

आत्मनस्तत्प्रकाशत्वं यत्पदार्थावभासनम् ।
नाग्न्यादिदीप्तिवद्दीप्तिर्भवत्यान्ध्यं यतो निशि ॥ २२ ॥

பதார்த்தங்களை விளக்குவது யாதோ அஃது ஆத்மாவின் பிரகாசத்தன்மையாம். * இப்பிரகாசமானது அக்கினியாதி பிரகாசங்கள் இரவில் இருளடைதலால் அவ்வகைப் பிரகாசங்களைப்போன்றதன்று. (௨௨)

இப்போது ஆத்மாநாத்மவபேதங் காண்கின்றவர்களைப் பரிகசித்து இரண்டற்குமுள்ள பேதத்தினை விளக்குகின்றார்:—

देहोऽहमित्ययं मूढो धृत्वा तिष्ठत्यहो जनः ।
ममायमित्यपि ज्ञात्वा घटद्रष्टेव सर्वदा ॥ २३ ॥

கடதிருஷ்டாவை (குடத்தைக் காண்பவனைப்) போல இவ்வுடல் என்னுடையதென்றெப்போதுமுணர்ந்திருந்தும், இவ்வுடலை யானெனக்கொண்டு மூடர்கள் (கிருதகிருத்தியபுத்தியினால் சும்மா) இருக்கின்றார்கள். இது பெரும் அறியாமையேயாம். (௨௩)

(அ-கை.) இவ்வாறு அஞ்ஞானத்தை நிரூபித்து அதனை நிவர்த்திக்கும் ஆத்மஞானத்தினைக் கூறுகின்றார்:—

ब्रह्मैवाहं समः शान्तः सच्चिदानन्दलक्षणः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २४ ॥

யான் சமமும் சாந்தமும் சச்சிதாநந்தலக்ஷணமுமாகிய பிரஹ்மமே; அசத்துரூபமான தேகமல்லனென்பது அறிஞர்களால் ஞானமெனப்படுகின்றது. (௨௪)

---

* இது அக்கினியின் ஒளி, இது அவ்வொளியினின்மையாகிய இருள் எனப்பிரகாசதமங்களைத் தனக்கு வேறுபிரகாசங்களின் அபேக்ஷயின்றி விளக்குதலால் இது அவற்றின் பிரகாசம்போன்றதன்றென்றார்.

(அ-கை.) அப்படியானால் நான் பிறந்தேன் இறந்தேன் என்றல் முதலிய அநேக விகாரங்களையுடைய எனக்குப் பிரஹ்மத்துவம் எவ்வாறு மென்னுமிடத்துக் கூறுகின்றார்:—

निर्विकारो निराकारो निरवद्योऽहमव्ययः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २५ ॥

யான் நிர்விகாரன் (பிறப்பு முதலிய திரிபில்லாதவன்), நிராகாரன், நிரவத்தியன் (அத்தியாத்மாதி மூன்று தாபங்களுமில்லாதவன்), அவ்வியயன் (குறைவு நிறைவில்லாதவன்), * அசத்தாகிய தேகமல்லன் என்பது அறிஞர்களால் ஞான மெனப்படுகின்றது. (உரு)

(அ-கை.) மீண்டும் ஞானம் எவ்விலக்ஷணத்த தென்னுமிடத்துக் கூறுகின்றார்:—

निरामयो निराभासो निर्विकल्पोऽहमाततः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २६ ॥

யான் நிராமயன் (நோயில்லாதவன்), † நிராபாசன், நிர்விகற்பன், வியாபகன், அசத்தாகிய தேகமல்லன் என்பது அறிஞர்............ (உசா)

(அ-கை.) இதுவுமது:—

निर्गुणो निष्क्रियो नित्यो नित्यमुक्तोऽहमच्युतः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २७ ॥

---

* அசத்தாகிய தேகமல்ல னென்பது அறிஞர்களால் ஞான மெனப்படுகின்றது என்று பின்னும் கூறியது புநருக்திதோஷ (கூறியது கூறலென்னும் குற்ற) மாகாதோவெனின் ஞானப்பிரதிபந்தகமாகிய புத்திமந்தத்தன்மை விபரீதமுதலியவையுள்ளவனுக்குத் திடமாதற்பொருட்டாகலின் குற்றமாகாது.

† விருத்திவியாப்பியத்தன்மை யிருக்கினும் பலவியாப்பியத்தன்மையின்மையால் நிராபாஸன். ஆபாஸன் பலம். விருத்திவியாப்திபலவியாப்திகளின் லக்ஷணம் விசாரசாகரமுதலியவற்றிற் காண்க.

யான் நிர்க்குணன், நிஷ்கிரியன், நித்தியன், நித்தியமுக்தன், அச்சுதன் (நழுவுதலில்லாதவன்), தேகமல்லன் என்பது........... (உஎ)

(அ-கை) இதுவுமது:—

निर्मलो निश्चलोऽनन्तः शुद्धोऽहमजरोऽमरः ।
नाहं देहो ह्यसद्रूपो ज्ञानमित्युच्यते बुधैः ॥ २८ ॥

யான் நிர்மலன், நிச்சலன், அநந்தன் சுத்தன், அஜரன், அமரன், தேகமல்லன் என்பது........... (உஅ)

(அ-கை.) அப்படியானால் ஆத்மா பிரத்தியக்ஷதேகமாகாதெனின் ஆத்மாவிற்குச் சூநியத்தன்மை யுண்டாகுமென் றாசங்கித்துக் கூறுகின்றார்:—

स्वदेहो शोभनं संतं पुरुषाख्यं च संमतम् ।
किं मूर्ख सून्यमात्मानं देहातीतं करोषि भोः ॥ २९ ॥

மூர்க்கனே (சூநியவாதியே)! தனது தேகத்தில் * புருஷனெனப்படுவதும், சோபனமும், † சுருதி ஸ்மிருதி சம்மதமானதும், என்றுமுள்ளதும் (சர்வாதிஷ்டானமும்), தேகாதீதமுமான ஆத்மாவைச் (ஆகாயத்தாமரைப்போல்) சூநிய மென்று மதிக்கின்றையா? என்னே? (மதிக்காதே யென்பது கருத்து.) (உகூ)

(அ-கை) அப்படியானால் சூநியவாதிகளின் அபாவம் வாய்த்தலாலே சூநியம் வேண்டாம். ஆனால் ஆத்மா தேகத்திற்கு வேறான தென்பதில் பிரமாணமின்மையால் தேகமே ஆத்மாவாகுமென் றாசங்கித்துக் கூறுகின்றார்:—

स्वात्मानं शृणु मूर्ख त्वं श्रुत्या युक्त्या च पूरुषम् ।
देहातीतं सदाकारं सुदुर्दर्शं भवादृशैः ॥ ३० ॥

---

* ஆத்மா ஜாக்கிராதி அல்லது ஸ்தூலதேகாதி புரங்களில் வசித்தலால் புருஷனெனப்படுவன்.

† "**अयमात्मा ब्रह्म** இந்த ஆத்மா பிரஹ்மம்" மென்பது சுருதி.

"**उत्तमपुरुषस्त्वन्यः** உத்தமபுருஷனோ அந்நியன்" என்பது ஸ்மிருதி.

மூடனே (தேகாத்மவாதியே)! ‡ தேகாதீதமும், சத்துவடிவமும், உன்னைப்போன்ற சுருதியாசாரியசிரத்தையில்லாதவர்களால் எவ்வாற்றானும் அறிதற்கரியதுமான சுவாத்மாவைச் சுருதியினாலும் யுக்தியினாலும் நீ கேட்பாயாக. (௨௰)

(அ-கை.) அதனையே அகம் (யான்) என்பது முதலிய ஏழு சுலோகங்களாற் கூறுகின்றார்:—

अहं शब्देन विख्यात एक एव स्थितः परः ।
स्थूलस्त्वनेकतां प्राप्तः अथं स्याद्देहकः पुमान् ॥ २१ ॥

ஒன்றேயாயுள்ள பரம் (தேகத்திற் கந்நியமான ஆத்மா) ¶ அகம் சத்தத்தாற் பிரசித்தமாம். அநேகத்தன்மையடைந்த ஸ்தூலதேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௨௧)

(அ-கை.) அவ்வாத்மாவிற்கும் தேகத்திற்குமுள்ள மிகுதியான விலக்ஷணத்தன்மையினையே கூறுகின்றார்:—

अहं द्रष्टृतया सिद्धो देहो दृश्यतया स्थितः ।
ममायमिति निर्देशात्कथं स्याद्देहकः पुमान् ॥ २२ ॥

யான் திருஷ்டா (காண்பவன்) எனுந்தன்மையாற் பிரசித்தன்; தேகம் திருசியத் (காணப்படுந்) தன்மையானுள்ளது. ஆகலின் தேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௨௨)

(அ-கை.) இதுவுமது.

अहं विकारहीनस्तु देहो नित्यं विकारवान् ।
इति प्रतीयते साक्षात्कथं० ॥ २३ ॥

---

‡ "तस्माद्वा एतस्मादन्नरसमयादन्योन्तर आत्मा अந்த அல்லது இந்த அன்னரசமயனினின்றும் இந்த அந்தராத்மா வேறு" என்னும் சுருதியினால் ஆத்மா அன்னமயதேகத்தினும் வேறாயிருத்தலின் தேகாதீதமெனப்பட்டது.

¶ அகம்சத்தமென்னும் பதம் யானென்னும் உணர்ச்சிக்கும் உபலக்ஷணமாம்.

யான் விகாரமில்லாதவன்; தேகம் அநித்தியம் விகாரமுடையது என்பது பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகின்றது; ஆகவின் தேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௩௩)

(அ-கை.) இவ்வாறு யுக்தியினால் தேகாத்மாக்களின் விலக்ஷணத்தன்மையினைக் கூறி சுருதியினாலும் கூறுகின்றார்:—

यस्मात्परमिति श्रुत्या तया पुरुषलक्षणम् ।
विनिर्णीतं विमूढेन कथं० ॥ ३४ ॥

* எதனின் மேலானது என்னும் † அச்சுருதியினால் புருஷலக்ஷணம் விமூடனால் (மூடமின்றியவனால்) விசாரித்து நிறுத்தப்பட்டது. ஆகலின் ஸ்தூலதேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௩௪)

(அ-கை.) இவ்வாறு இவ்வொரு சுருதியினால்மாத்திரம் நிச்சயிக்கப்பட்டதன்று, வேறு சுருதியினாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறுகின்றார்:—

सर्वं पुरुष एवेति सूक्ते पुरुषसंज्ञिते ।
अप्युच्यते यतः यतः श्रुत्या कथं० ॥ ३५ ॥

வேதமென்னும் பரதேவதையால் புருஷசூக்தத்தினும் ‡ எல்லாம் புருஷனே யென்று சொல்லப்பட்டிருத்தலால் தேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௩௫)

---

* "यस्मात्परतरं नापरमस्ति किंचिद्यस्मान्नाणीयो न ज्यायोऽस्ति कश्चित् । वृक्ष इव स्तब्धो दिवि तिष्ठत्येकस्तेनेदं पूर्णं पुरुषेण सर्वं ॥ எதனின் மேலானதும் கீழானது மில்லையோ, எதனின் நுண்ணியதும் பெரியது மில்லையோ, எது விருக்ஷத்தைப்போல் அசைவற்றதாய் ஏகமாய் வானில் நிற்கின்றதோ, அந்தப் புருஷனால் இவ்வெல்லாஜகத்தும் நிறைந்திருக்கின்றது" என்பது சுருதி.

† அச்சுருதியினால் = பிரசித்தமாகிய தைத்திரீயசுருதியினால் (தைத்திரீயம் நாராயணவல்லி).

‡ "पुरुषं एवेदं सर्वं இவ்வெல்லாஜகத்தும் புருஷனே" என்பது புருஷசூக்தம்.

(அ-கை.) வேறு சுருதியினாலும் இவ்வாறே நிச்சயிக்கப் பட்டிருக்கிறதென்று கூறுகின்றார்:—

असंगः पुरुषः प्रोक्तः बृहदारण्यकेऽपि च ।
अनंतमलसंश्लिष्टः कथं० ॥ ३६ ॥

வாஜஸநேயவுபநிடதமாகிய பிரகதாரணியத்திலும் $ புருஷன் அசங்கனென்று சொல்லப்பட்டிருத்தலால், அளவற்ற மலத்தோடு கூடிய தேக மெங்ஙனம் புருஷனாகும்? (௩௬)

(அ-கை) அதன்கண்ணே வேறுவிதத்தாலும் தேகாத்மாக்களின் விலக்ஷணத்தன்மை நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்று கூறுகின்றார்:—

तत्रैव च समाख्यातः स्वयंज्योतिर्हि पूरुषः ।
जडः परप्रकाश्योऽसौ कथं० ॥ ३७ ॥

ஆண்டே (பிரகதாரணியத்திற்றானே) * புருஷன் சுவயஞ்சோதியென்று சொல்லப்பட்டிருத்தலால், மற்றொன்றால் பிரகாசிக்கப்படும் ஜடதேகம் எங்ஙனம் புருஷனாகும்? (௩௭)

(அ-கை.) இந்த ஞானகாண்டம் இருக்குக. கர்மகாண்டத்திலும் தேகாத்மாக்களின் பேதமே வர்ணிக்கப்பட்டிருக்கின்றதென்று கூறுகின்றார்:—

प्रोक्तोऽपि कर्मकांडेन ह्यात्मा देहाद्विलक्षणः ।
नित्यश्च तत्फलं भुंक्ते देहपातादनन्तरम् ॥ ३८ ॥

† கர்மகாண்டத்தினும் தேகவிலக்ஷணனான ஆத்மா நித்தியனாய்த் தேகம் நீங்கிய பின்னர் அதன் பயனைப் புசிக்கின்றானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. (௩௮)

---

$ "असंगो ह्ययं पुरुषः இப்புருஷன் அசங்கன்" என்பது பிரகதாரணியம்.

* "अत्रायं पुरुषः स्वयंज्योतिर्भवति இங்கு இப்புருஷன் சுவயஞ்சோதி யாகின்றான்" என்பது பிரகதாரணியம்.

† "यावज्जीवमग्निहोत्रं जुहुयात् ஜீவித்திருக்கும்வரை அக்கினிஹோத்திரத்தைச் செய்யக்கடவன்" என்றல்முதலியவடிவ சித்தசுத்தியைத் தரும் கர்மத்தைப் பிரதிபாதிக்கும் வேதபாகத்தினும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்குள்ள உம்மையால் நியாயசாங்கியாதிகளிலும் இத்தேகாத்மபேதமே சொல்லப்பட்டிருக்கிற தென்பது காட்டப்பட்டது.

(அ-கை) அப்படியானால் இவ்வாறாகவே வேதாந்திக ளுக்கு அபசித்தாந்த முண்டாமெனக் கூறுகின்றார்:—

लिंगं चानेकसंयुक्तं चलं दृश्यं विकारि च ।
अव्यापकमसद्रूपं तत्कथं स्यात्पुमानयम् ॥ ३९ ॥

$ இலிங்கமும் அநேகவற்றோடுகூடியதும், சஞ்சலமும், திருசியமும், விகாரியும், அவ்வியாபகமும், அசத்துரூபமுமா யிருத்தலால் அஃதெங்ஙன மிப்புருஷனாகும்? (ஙகூ)

(அ-கை.) இப்போது முற்கூறிய அர்த்தத்தினை உபசங் கரிக்கின்றார்:—

एवं देहद्वयादन्य आत्मा पुरुष ईश्वरः ।
सर्वात्मा सर्वरूपश्च सर्वातीतोऽहमव्ययः ॥ ४० ॥

இவ்வாறு தேக மிரண்டற்கும் வேறாய ஆத்மாவாகிய புருஷன் § ஈசுவரனும், சர்வாத்மாவும், சர்வரூபமும், சர்வாதீதமும், யானென்னும் பிரத்தியயத்திற்கு ஆலம்பனமாக (பற்றுக் கோடாக) என்றும் அறிவுசொரூபமாயிருப்பதும், அவ்வியயமா யுள்ளதுமாம்.

(அ-கை.) அப்படியானால் ஆத்மாவிற்குத் தேகமிரண்டற் கும் வேறுதற்றன்மையைக் கூறுதல் அநர்த்தமுடையதா மென்று கூறுகின்றார்:—

इत्यात्मदेहभागेन प्रपंचस्यैव सत्यता ।
यथोक्ता तर्कशास्त्रेण ततः किं पुरुषार्थता ॥ ४१ ॥

---

$ இவ்வும்மையால் காரணசரீரமும் நிராகரிக்கப்பட்டது.

§ புருஷன் ஜீவனோ என்பதை யொழிக்க ஈசுவரனு மென்னும் அடைகொடுத்தார். ஈசுவர னென்பதற்குக் காரணமாகச் சர்வாத்மா வென்றார். அப்படியானால் அத்வைதத்திற்கு ஆனிவருமாதலின் அதனை நீக்கச் சர்வரூபமும் என்றார். அவ்வாறாயின் விகாரித்துவமுண்டாகலின் அதனை நீக்கச் சர்வாதீத மென்றார். இத்தன்மையாகவிருக்கின் பிரத்தி யக்ஷமாகவேண்டுமே யெனின் பிரத்தியக்ஷமே யென்பார் யானென்றும், யானெனின் அகங்காரமே யென்பதனை நீக்க அவ்வியயமு மென்றும் கூறினார்.

இவ்வாறு ஆத்ம தேக விபாகத்தால் பிரபஞ்சத்திற்கே தார்க்கசாஸ்திரத்திற் கூறியவண்ணம் சத்தியத்தன்மை சொல்லப்பட்டது. அதனால் (பிரபஞ்சசத்தியத்தன்மையைக் கூறுதலால்) புருஷார்த்தத்தன்மை யாது? (இழிந்த புருஷார்த்தத் தன்மையாம்; பயநிவிருத்தியின்மையின்; "द्वितीयाद्वै भयं भवति இரண்டாவதாற் பயமுண்டாகின்ற" தென்னும் சுருதியா லென்பது பொருள்.) (சக)

(அ-கை.) பேதஞானம் அபேதஞானத்தைக் குறித்துக் காரணமாதலின் ஆத்மதேகங்களின் விபாகத்தைக் கூறுதல் அநர்த்தமுடைய தன்றென்று கூறுகின்றார்:—

इत्यत्मदेहभेदेन देहात्मत्वं निवारितम् ।
इदानीं देहभेदस्य ह्यसत्वं स्फुटमुच्यते ॥ ४२ ॥

இவ்வாறு ஆத்மதேகபேதத்தால் * தேகாத்மத்தன்மை நிவர்த்திக்கப்பட்டது. ¶ இப்போது தேகபேதத்தின் அசத்துத்தன்மை தெளிவாகச் சொல்லப்பட்டது. (சஉ)

(அ-கை.) அதனையே கூறுவதோடு அப்பேதமும் மித்தையாமென்று திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

चैतन्यस्यैकरूपत्वाद्भेदो युक्तो न कर्हिचित् ।
जीवत्वं च मृषा ज्ञेयं रज्जौ सर्पग्रहो यथा ॥ ४३ ॥

‡ சைதன்னியம் ஏகரூபமாயிருத்தலால், எங்ஙிலையினும் அதற்குப் பேதம் பொருத்தமுடைய தன்று. ஜீவத்துவமும் இரஜ்ஜுவில் சர்ப்பஞானம்போல மித்தையென் றறியத்தக்கதாம். (சங)

---

* இதனால் சார்வாகமதம் நிராகரிக்கப்பட்டது.

¶ இப்போது பிற்பாதி சுலோகத்தால் அந்தத் தேகபேதத்தின் அசத்துத்தன்மையை அதாவது ஆத்மசத்தைக்கு வேறான சத்தையில்லாமையை விளங்கும்படி சொல்லுகின்றார்.

‡ சகல பூத பௌதிகப் பிரபஞ்சத்தின் அதிஷ்டானமாய் விளங்குவதாயிருத்தலின் சைதன்னியமாம். அது "கடம் பிரகாசிக்கிறது, படம் பிரகாசிக்கிறது" என்பன முதலியவற்றில் ஒருவடிவமாயிருத்தலால் ஏகரூபமா யிருத்தலால் என்றார்.

(அ-கை.) இப்போது முற்கூறிய திருஷ்டாந்தத்தினையே விவரித்து எல்லாப்பிரபஞ்சத்தின் பிரஹ்மரூபத்தன்மையினைக் கூறுகின்றார்:—

रज्ज्वज्ञानात् क्षणेनैव यद्वद्रज्जुर्हि सर्पिणी ।
भाति तद्वच्चितिः साक्षाद्विश्वाकारेण केवला ॥ ४४ ॥

இரஜ்ஜுவஞ்ஞானத்தால் (கயிற்றை யறியாததினால்) க்ஷணத்தில் இரஜ்ஜுவானது சர்ப்பமாகத் தோற்றுவதுபோல்க் † கேவலம் சித்தானது சாக்ஷாத் பிரபஞ்சவடிவமாகத் தோற்றுகின்றது. (சச)

(அ-கை.) இங்கு ஏதுக்களைக் காட்டி முற்கூறியதனை முடிக்கின்றார்:—

उपादानं प्रपंचस्य ब्रह्मणोन्यन्न विद्यते ।
तस्मात्सर्वप्रपंचोयं ब्रह्मैवास्ति न चेतरत् ॥ ४५ ॥

$ பிரபஞ்சத்தின் உபாதானம் பிரஹ்மத்தின் வேறாதல்லை; ஆதலால் இவ்வெல்லாப் பிரபஞ்சமும் பிரஹ்மமே; வேறில்லை. (சரு)

(அ-கை.) அப்படியானால் வியாப்பியவியாபகத்தன்மை வடிவ பேதமிருக்குங்கால் எப்படிப் பிரபஞ்சத்திற்குப் பிரஹ்மத்தன்மை யுளதாகுமென் றாசங்கித்துக் கூறுகின்றார்:—

व्याप्यव्यापकता मिथ्या सर्वमात्मेति शासनात् ।
इति ज्ञाते परे तत्त्वे भेदस्यावसरः कुतः ॥ ४६ ॥

---

† கேவல மென்னும் விசேஷணத்தான் முன் நிலையை விடாது வேறு நிலையை யடைதலாகிய விவர்த்தோபாதானத்தன்மையே சொல்லப்பட்டது; ஆரம்ப உபாதானத்துவமும் பரிணாமி உபாதானத்துவமும் சொல்லப்படவில்லையென் றறியத்தக்கதாம்.

கடத்திற்கு மண்ணும் பூஷணத்திற்குப் பொன்னும் உபாதானமாதல் போலப் பிரபஞ்சத்திற்குப் பிரஹ்மம் உபாதானமாம்.

$ "तस्माद्वा एतस्मादात्मन आकाशस्सम्भूतः அந்த அல்லது இந்த ஆத்மாவினின்றும் ஆகாயமுண்டாயிற்று." என்றல் முதலிய சுருதியினால் ஆகாயாதிதேகாந்தமான பிரபஞ்சவிஸ்தாரத்திற்கு மாயையோடு கூடிய பிரஹ்மசைதன்னியத்தைவிட வேறு பரமாணுக்களாவது பிரகிருதியாவது காரணவிசேஷமாகிய உபாதானமாகா தென்பது பொருள்.

**तत्सर्वं यदयमात्मा** எல்லாம் ஆத்மாவென்னும் சுருதியாகிய ஈசுவராஞ்ஞாபலத்தால் (ஈசனதாணைவலியால்) வியாப்பியவியாபகத் தன்மை (உள்வெளியாந்தன்மை) மித்தையாமென்றறிந்தகாலத்துப் பாதத்துவத்தில் பேதத்தின் அவசரமேது? இல்லையென்றபடி. (சகூ)

(அ-கை.) அப்படியானால் பிரத்தியக்ஷமான வியாப்பியவியாபகத்தன்மை எப்படி மித்தையாமென்றாசங்கித்துக் கூறுகின்றார்:—

श्रुत्या निवारितं नूनं नानात्वं स्वमुखेन हि ।
कथं भासो भवेदन्यः स्थिते चाद्वयकारेण ॥ ४७ ॥

நிச்சயமாகச் * சுருதி தனது முகத்தானே பிரசித்தமாய் நாநாத்துவத்தை நிவர்த்திப்பதாக அத்துவயகாரணத்தில் (‡ அபின்ன நிமித்தோபாதான காரணமான பிரஹ்மத்தில்) நிலைக்குங்கால், அந்நியமான (வியாப்பியவியாபகத்தன்மைத்) தோற்றம் எங்ஙனம் உண்டாகும்? (ஒருவாற்றானு முண்டாகாதென்பது பொருள்.) (சஎ)

(அ-கை.) அன்றியும் சுருதியில் பேததிருஷ்டிக்குத் தோஷம் கேட்கப்படுதலாலும் காரணத்தைவிடக் காரியம் வேறாகாததேயாமென்று கூறுகின்றார்:—

दोषोपि विहितः श्रुत्या मृत्योर्मृत्युं स गच्छति ।
इह पश्यति नानात्वं मायया वंचितो नरः ॥ ४८ ॥

மாயையினால் வஞ்சிக்கப்பட்ட நரன் இங்கு நாநாத்துவத்தைக் காண்கிறான் “அவன் மிருத்தியுவினின்றும் மிருத்தி

---

* “**नेह नानास्ति किंचन** இங்கு நாநாவென்பது சிறிதுமில்லை” யென்பது பிரசித்த சுருதி.

‡ சிலந்தி யொன்றே நூலிற்கு உபாதானமும் நிமித்தமுமாவதுபோலப் பிரஹ்ம மொன்றே பிரபஞ்சத்திற்கு உபாதானமும் நிமித்தமுமாயிருத்தலால் அபின்னநிமித்தோபாதானமாம். நிமித்தமும் உபாதானமும் வேறாகாததனை **அபின்னநிமித்தோபாதான** மென்பர்.

யுவை யடைகின்றான்" என்னும் *விகிதசுருதியினால் பேததிருஷ்டியின் தோஷமும் கேட்கப்படுகின்றது. (சஅ)

(அ-கை.) அப்படியானால் என்ன செய்யவேண்டுமெனக் கூறுகின்றார்:—

ब्रह्मणः सर्वभूतानि जायन्ते परमात्मनः ।
तस्मादेतानि ब्रह्मैव भवंतीत्यवधारयेत् ॥ ४९ ॥

† பிரஹ்மமாகிய ‡ பரமாத்மாவினின்றும் சகல பூதங்களு முண்டாயின. ஆதலால் இவை பிரஹ்மமே யாகின்றன வென்று நிச்சயிக்கவேண்டும். (சகூ)

(அ-கை அப்படியானால் நாநா நாமரூப கர்மபேதத்தால் விசித்திரமான பூதங்கள் எப்படி ஒரு பிரஹ்மவடிவமா மென்று சங்கித்துக் கூறுகின்றார் :—

ब्रह्मैव सर्वनामानि रूपाणि विविधानि च ।
कर्माण्यपि समग्राणि बिभर्तीति श्रुतिर्जगौ ॥ ५० ॥

சகல நாமங்களையும் வெவ்வேறுவிதமான ரூபங்களையும் சகல கர்மங்களையும் பிரஹ்மமே தரிக்கின்றதெனச் சுருதி கூறுகின்றது. (ருo)

---

$ "मृत्योस्स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति எவன் ஈண்டுப் பலவற்றையே காண்கின்றானோ அவன் மிருத்தியுவினின்றும் மிருத்தியுவை யடைகின்றான்" இது கடவல்லியுபநிஷத்து.

‡ அபரிச்சின்னமாகிய.

‡ "यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति । यत्प्रयन्त्यभिसंविशन्तीति । तद्विजिज्ञासस्व । तद्ब्रह्मेति எதனினின்றும் இப்பூதங்களெல்லா முண்டாகின்றனவோ, எதனால் உண்டான பூதங்களெல்லாம் ஜீவிக்கின்றனவோ, விநாசகாலத்து எந்தப் பிரஹ்மத்தின்கண் சென்று தாதாத்மியத்தினையே யடைகின்றனவோ, அதனை 'அது பிரஹ்ம' மென்று அறியவிரும்புவாயாக" என்பது தைத்திரீயசுருதி.

(அ-கை.) இங்கு உலகப்பிரசித்தமான திருஷ்டாந்தங் கூறுகின்றார்:—

सुवर्णाज्जायमानस्य सुवर्णत्वं च शाश्वतं ।
ब्रह्मणो जायमानस्य ब्रह्मत्वं च तथा भवेत् ॥ ५१ ॥

சுவர்ணத்தினின்று முண்டானதற்குச் சுவர்ணத்தன்மை சாசுவதமாதல் போலப் பிஹ்மத்தினின்று முண்டாகியதற்குப் பிரஹ்மத்தன்மை சாசுவதமாம். (௫௧)

(அ-கை.) இவ்வாறு கர்த்தா கர்மமுதலிய * காரகங்கள் ஆறினுக்கும் ஒரு அதிஷ்டானவடிவத்தன்மை சித்தித்திருக்கவும் பேதத்தைக் காண்பவர்களுக்குப் பயத்தைக் கூறுகின்றார்:—

स्वल्पमप्यंतरं कृत्वा जीवात्मपरमात्मनोः ।
यः संतिष्ठति मूढात्मा भयं तस्याभिभाषितम् ॥ ५२ ॥

எந்த மூடாத்மாவானவன் ஜீவாத்மபரமாத்மாக்களுக்குச் சிறிதாயினும் † பேதத்தைக் கற்பித்து நிற்கின்றானோ, அவனுக்குப் பயம் சொல்லப்பட்டிருக்கின்றது. (௫௨)

(அ-கை.) அப்படியானால் ஒளியுமிருளும்போல ஒன்றற்கொன்று விரோதமான சுபாவமுள்ள துவைதாத்துவைதங்களுக்கு எப்படி ஓரதிகரணத்தன்மை (ஓரிடத்திருத்தற்றன்மை) யாமென்றாசங்கித்து அவஸ்தாபேதத்தினாலா மென்று கூறுகின்றார்:—

---

* "விழிகுறை யிரண்டையும் விட்ட வேற்றுமைகள்
வினையான் முறியிற் காரக மெனப்பெறுங்
குன்றையும் வினைகொளி னேரோவழிக் கூடும்"
என்னும் சூத்திரத்தாற் காரகத்தின் இலக்ஷணத்தைக் காண்க.

† "यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते अथ तस्य भयं भवति ॥
எப்போது இவன் இதன்கண் சிறிதேனும் பேதத்தைக் காண்கின்றானோ, அப்போது இவனுக்குப் பய முண்டாகின்றது. (பேதப்பார்வை பயத்திற்குக் காரண மென்பது பொருள்.)" இது தைத்திரீயசுருதி.

यत्राज्ञानाद्भवेद्द्वैतमितरस्तत्र पश्यति ।
आत्मत्वेन यदा सर्वं नेतरस्तत्र चाण्वपि ॥ ५३ ॥

* எப்போது (எந்த அஞ்ஞானதசையில்) அஞ்ஞானத்தால் துவைதம்போலாகின்றதோ, அப்போது அந்நியன் அந்நியத்தைக் காண்கின்றான். எப்போது (ஞானதசையில்) † எல்லாம் ஆத்மத்தன்மையை யடைகின்றதோ, அப்போது (ஞானகாலத்தில்) அந்நியன் சிறிதும் வேறொன்றை யறிகிறதில்லை; காரியத்தோடு அஞ்ஞானம் நிவிருத்தியாதலாலென்பது தாற்பரியம். (ருங)

(அ-கை.) அப்படியானால் துவைதத்தைக் காணாவிடின் புருஷார்த்தம் யாதென்றாசங்கித்துச் சுருதியின் அர்த்தத்தாற் படிக்கின்றார்:—

यस्मिन्सर्वाणि भूतानि ह्यात्मत्वेन विजानतः ।
न वै तस्य भवेन्मोहो न च शोकोऽद्वितीयतः ॥ ५४ ॥

‡ எதில் சகலபூதங்களையும் ஆத்மாவாக அறிகின்றானோ, அந்த நிலையில் அவனுக்கு மோகமுண்டாகாது; சோகமுமில்லை; அத்விதீயத்தான் (இரண்டாவதின்மையான்). (ருச)

(அ-கை.) சோககாரணமான துவைதமின்மையிற் பிரமாணம் கூறுகின்றார்:—

अयमात्मा हि ब्रह्मैव सर्वात्मकतया स्थितः ।
इति निर्द्धारितं श्रुत्या बृहतारण्यसंस्थया ॥ ५५ ॥

---

* "यत्र हि द्वैतमिव भवति तदितर इतरं पश्यति । எப்போது துவைதம்போலாகின்றதோ அப்போது பிறன் பிறவற்றைக் காண்கின்றான்." என்பது பிருகதாரணியகசுருதி.

† "यत्रत्वस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं पश्येत् । எப்போது இவனுக்கு எல்லாம் ஆத்மாவே யாகின்றதோ, அப்போது எதனால் எதனைக் காண்பான்" என்பது பிருகதாரணியம்.

‡ "यस्मिन्सर्वाणि आत्मैवाभूत् विजानतः । तत्र को मोहः कश्शोक एकत्वमनुपश्यतः ॥ எந்த ஆத்மாவின்கண் பரமார்த்தமா யறிபவனுக்கு எல்லாப்பூதங்களும் ஆத்மாவே யாகின்றனவோ, அவ்வாத்மாவின்கண் ஐக்கியத்தைக் காண்பவனுக்கு மோகமேது? சோகமேது?" என்பது ஈசாவாசியசுருதி.

சர்வாத்மத்தன்மையாயுள்ள * இவ்வாத்மா பிரஹ்மமே யென்று பிரகதாரணிய மென்னும் சுருதியினுல் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. (ருரு)

(அ-கை) அப்படியானுல் இவ்வுலகத்திலேயே அவற்றின் காரணமான இவ்வுலகமுளதாக எப்படி அச்சோகாதிகளின் அபாவம் சொல்லப்படுமென் ருசங்கித்துத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்ருர்:—

अनुभूतोऽप्ययं लोके व्यवहारक्षमोऽपि सन् ।
असद्रूपो यथास्वप्न उत्तरक्षणबाधतः ॥ ५६ ॥

இவ்வுலகம் அநுபவிக்கப்படுவதாயினும், விவகாரசாமர்த்திய முடையதாயினும், சொப்பனம்போல் பிற்கணத்திற் பாதமா (மித்தையென்று நிச்சயிக்கப்படு)தலால் அசத்துவடிவமாம். ()

(அ-கை) திருஷ்டாந்தத்தினை விவரித்து முற்கூறிய நியாயத்தினை வேறிடத்தும் † அதிதேசஞ் செய்கின்ருர் :—

स्वप्नो जागरणेऽलीकः स्वप्नेपि जागरो नहि ।
द्वयमेव लये नास्ति लयोपि ह्युभयोर्न च ॥ ५७ ॥

சொப்பனம் சாக்கிரத்திற் பொய், சாக்கிரமும் சொப்பனத்தி லில்லை. அவ்விரண்டும் இலயமாகிய சுழுத்தியி லில்லை. சுழுத்தி அவ்விரண்டினு மில்லை. (ருஎ)

(அ-கை) முற்கூறியதனை முடித்துப் பலிதத்தைக் கூறி அப்படியானுல் சத்தியம் யாதெனக் கூறுகின்ருர்:—

त्रयमेवं भवेन्मिथ्या गुणत्रयविनिर्मितम् ।
अस्य द्रष्टा गुणातीतो नित्यो ह्येकश्चिदात्मकः ५८ ॥

---

* "स वा अयमात्मा ब्रह्मविज्ञानमयः அந்த அல்லது இந்த ஆத்மா பிரஹ்ம விஞ்ஞானமயன்" என்பது சுருதி.

† ஓரிடத்துள்ளதனை மற்ருேரிடத்தும் சேர்த்துக்கொள்ளுதலை அதிதேச மென்பர். மாட்டேறிந்தொழுக லென்பதும் இது.

மூக்குணங்களாலும் ஆக்கப்பட்ட மூன்றவத்தையும் மித்தையாம். இவற்றின் திருஷ்டா குணாதீதமும், நித்தியமும், ஏகமுமாகிய சிதாத்மாவாம். (ருஅ)

(அ-கை.) அப்படியானால் அவத்தை மூன்றும் மித்தையாகுக; ஜீவன் சத்தியனாவனென் றாசங்கித்துத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

यद्वन्मृदि घटभ्रान्तिः शुक्तौ वा रजतस्थितिः ।
तद्वद्ब्रह्मणि जीवत्वं वीक्ष्यमाणे न पश्यति ॥ ५९ ॥

மண்ணிற் கடப்பிராந்தியும், சுத்தியில் வெள்ளியினிருப்பும் போல, பிரஹ்மத்தில் ஜீவத்தன்மையானது உற்றுநோக்குங்கால் (ஆத்மத்தன்மையாகப் பார்க்குங்கால்) காணப்படுகிறதில்லை. ()

(அ-கை.) அஞ்ஞானவஸ்தையிற் றோற்றும் ஜீவம்பிரஹ்மபேதம் பெயர்மாத்திரமா மென்று வெகு திருஷ்டாந்தங்களாற் கூறுகின்றார்:—

यथा मृदि घटो नाम कनके कुण्डलाभिधा ।
शुक्तौ हि रजतख्यातिर्जीवशब्दस्तथा परे ॥ ६० ॥

மண்ணிற் கட மென்னும் பெயரும், கனகத்திற் குண்டல மென்னும் பெயரும், சுத்தியில் வெள்ளி யென்னும் பெயரும் போலப் பிரஹ்மத்தில் ஜீவ னென்னும் பெயருளதாம். (சுo)

(அ-கை.) ஜீவன் மாத்திரமே நாம (பெயர்) மாத்திர மன்று, சகல ஜகத்தும் பிரஹ்மத்தில் நாமமாத்திரமா மென்று அநேக திருஷ்டாந்தங்களாற் கூறுகின்றார்:—

यथैव व्योम्नि नीलत्वं यथा नीरं मरुस्थले ।
पुरुषत्वं यथा स्थाणौ तद्वद्विश्वं चिदात्मनि ॥ ६१ ॥

ஆகாயத்திற் கருமையும், கானலில் நீரும், கட்டையிற் புருஷத்தன்மையும் போலச் சிதாத்மாவிற் பிரபஞ்சம் தோற்றுகின்றது. (சுக)

(அ-கை.) பெயர்மாத்திரமான பிரபஞ்சத்தின் மித்தியாத் தன்மைவாசனை திடமாதற்பொருட்டு இவ்வர்த்தத்தினையே அநேக உலகதிருஷ்டாந்தங்களால் விரிக்கின்றார்:—

यथैव शून्ये वैतालो गंधर्वाणां पुरं यथा ।
यथाकाशे द्विचंद्रत्वं तद्वत्सत्ये जगत्स्थितिः ॥ ६२ ॥

சூனியத்தில் வேதாளம்போலும், * கந்தர்வநகரம்போலும் ஆகாயத்தில் இரட்டைச்சந்திரன்போலுமாம் உண்மையில் (சத்தியத்தில்) உலகஸ்திதி. (சாஉ)

(அ-கை.) இதுவுமது.

यथा तरंगकल्लोलैर्जलमेव स्फुरत्यलम् ।
पात्ररूपेण ताम्रं हि ब्रह्मांडौघैस्तथात्मता ॥ ६३ ॥

நீர் அலைமுதலியனவாகவும், தாம்பிரம் பாத்திரவடிவமாகவும் தோற்றுவதுபோல, ஆத்மத்தன்மை பிரஹ்மாண்டங்களாகத் தோற்றுகின்றது. (சாங)

(அ-கை.) உலகதிருஷ்டாந்தத்தினைக் கூறி, அப்படியானால் இந்த மித்தியாத்தன்மைவாசனையின் திடத்தன்மையினால் என்ன சித்தித்ததெனக் கூறுகின்றார் :—

घटनाम्ना यथा पृथ्वी पटनाम्ना हि तंतवः ।
जगन्नाम्ना चिदाभाति ज्ञेयं तत्तदभावतः ॥ ६४ ॥

பிருதிவி கடமென்னும் பெயராலும், நூல் படமென்னும் பெயராலும் விளங்குவதுபோலச் சித்து ஜகத்தென்னும் பெயரால் விளங்குகின்றது. அதன் (அப்பெயரின்) அபாவத்தால் அஃது (பிரஹ்மம்) அறியத்தக்கதாம்; वाचारंभणं विकारो हि नामधेयं

* மேகத்தினால் இராஜநகரவடிவமாகக் கருமை பொன்மையாயுண்டாவது கந்தர்வநகரமெனப்படும்.

**मृत्तिकेत्येव सत्यं** நாமதேயமான விகாரமென்பது வாக்கின் ஆசிரயமாம், (சத்தியவஸ்துவன்று) மண்ணே சத்தியவஸ்துவா மென்னும் சுருதியினால். (சுச)

(அ-கை.) அப்படியானால் "எங்குத் துவைதம்போலாகின்றதோ" என்றல் முதலிய சுருதியர்த்தத்தைக் காணின் அவஸ்தாத்திரய விதேகமோக்ஷங்களே சொல்லப்பட்டிருக்கின்றன, ஜீவன்முத்தி சொல்லப்படவில்லையே யென்றுசங்கித்துக் கூறுகின்றார்:—

सर्वोपि व्यवहारस्तु ब्रह्मणा क्रियते जनैः ।
अज्ञानान्न विजानंति मृदेव हि घटादिकम् ॥ ६५ ॥

ஜனங்களால் சகல வியவகாரமும் பிரஹ்மத்தினால் செய்யப்படுகின்றது. கடமுதலியன மண்ணே யென அஞ்ஞானத்தால் அறிகிறதில்லை. (அஞ்ஞானநிவிருத்தியே ஜீவன்முக்தியாம், துவைதத்தோற்றமின்மை யன்றென்பது கருத்து.) (சுரு)

(அ-கை.) அதில் ஏதுவினைத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

कार्यकारणता नित्यमास्ते घटमृदोर्यथा ।
तथैव श्रुतियुक्तिभ्यां प्रपंचब्रह्मणोरिह ॥ ६६ ॥

கடத்திற்கும்மண்ணிற்கும் காரியகாரணத்தன்மை நித்தியமாயிருப்பதுபோலவே * சுருதியுக்திகளால் பிரபஞ்சத்திற்கும் பிரஹ்மத்திற்கும் ஈண்டு காரியகாரணத்தன்மை யிருக்கின்றது. (சுசு)

(அ-கை.) காரியகாரணத்தன்மை வேறுகாமையினையே விளக்குகின்றார்:—

---

"**यथा सौम्यैकेन मृत्पिण्डेन सर्वं मृण्मयं विज्ञातं स्यात्** சௌமியனே! எப்படி ஒரு மண்திரளால் யாவும் மண்வடிவ மென்று அறியப்படுகின்றனவோ" என்றல் முதலியன சுருதி.

**யுக்தியோ** காரியகாரணங்களுக்கு வேற்றுமையிருக்குமாயின் ஒரு காரணத்தை யறிதலால் சகல காரியங்களின் ஞானமு முண்டாகலாகாதென்பன முதலியனவாம்.

गृह्यमाणे घटे यद्वन्मृत्तिका याति वै बलात् ।
वीक्ष्यमाणे प्रपंचेऽपि ब्रह्मैवाभाति भासुरम् ॥ ६७ ॥

கடம் அறியப்படுங்காலத்து அத்தியந்தம் மிருத்திகை யாவதுபோல, ஆராயுங்காலத்துப் பிரபஞ்சமும் பிரமாணபேக்ஷையின்றி விளங்கத்தக்க பிரஹ்மமாகவே விளங்குகின்றது. ()

(அ-கை.) அப்படியானால் பிரஹ்மம் விளங்குங்கால் பிரபஞ்சம் தோற்றுதென் றாசங்கித்து அவஸ்தையின் பேதத்தால் இரண்டும் விளங்குமென்று திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

सदैवात्मा विशुद्धोऽस्ति ह्यशुद्धोभाति वै सदा ।
यथैव द्विविधा रज्जुर्ज्ञानिनोऽज्ञानिनोऽनिशम् ॥ ६८ ॥

இரஜ்ஜுவானது ஞானி (இரஜ்ஜுவென் றறிந்தவர்) களுக்குப் பயத்தைத் தராததும், அஞ்ஞானி (அங்ஙனமறியார்) களுக்குச் சர்ப்பரூபமாகப் பயத்தைத் தருவதுமாக இருவகையாய்த் தோற்றுவதுபோல, ஆத்மா ஞானிகளுக்கு என்றும் சுத்தமாயும் அஞ்ஞானிகளுக்கு என்றும் அசுத்தமாயு மிருப்பதாகத் தோற்றுகின்றது. (௬அ)

(அ-கை,) அப்படியானால் ஆத்மா எப்போதுமே நிஷ்பிரபஞ்சத்தன்மையாக விளங்கின் தேகாத்மபேதம் என் வர்ணிக்கப்பட்டதென் றாசங்கித்து, அவிவேகிகளுக்கோ வியர்த்தமேயாமென்று திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

यथैव मृण्मयः कुंभस्तद्वद्देहोपि चिन्मयः ।
आत्मनात्मविभागोऽयं मुधैव क्रियतेऽबुधैः ॥ ॥ ६९ ॥

கும்பம் மண்மயமாதல்போலத் தேகமும் சின்மயமாம். இவ்வாறாக இவ்வாத்மாநாத்மவிபாகம் அவிவேகிகளால் வியர்த்தமாகவே செய்யப்படுகின்றது. (௬௯)

(அ-கை.) இப்போது அவிவேகிகளின் கற்பிததேகதா தாத்மியத்தினைத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார்:—

सर्पत्वेन यथा रज्जू रजतत्वेन शुक्तिका ।
विनिर्णीता विमूढेन देहत्वेन तथात्मता ॥ ७० ॥

இரஜ்ஜு (கயிறு) சர்ப்பத்தன்மையாகவும் சுத்தி ரஜதத் தன்மையாகவும் நிர்ணயிக்கப்படுவதுபோல ஆத்மா தேகத்தன் மையாக மூடனால் நிச்சயிக்கப்படுகின்றது. (எ0)

(அ-கை.) இதுவுமது.

घटत्वेन यथा पृथ्वी पटत्वेनैव तंतवः ।
विनिर्णीता० ॥ ७१ ॥

பிருதிவி கடத்தன்மையாகவும், தந்துக்கள் படத்தன்மயாக வும் நிச்சயிக்கப்படுவதுபோல ஆத்மா......................(எக)

(அ-கை.) இதுவுமது.

कनकं कुंडलत्वेन तरंगत्वेन वै जलम् ।
विनिर्णीता० ॥ ७२ ॥

கனகம் குண்டலத்தன்மையாகவும், நீர் அலைத்தன்மையாக வும் நிச்சயிக்கப்படுவதுபோல ஆத்மா......................(எஉ)

(அ-கை.) இதுவுமது.

पुरुषत्वेन यथा स्थाणुर्जलत्वेन मरीचिका ।
विनिर्णीता० ॥ ७३ ॥

ஸ்தாணுபுருஷத்தன்மையாகவும், கானல்ஜலத்தன்மையாகவும் நிச்சயிக்கப்படுவதுபோல் ஆத்மா......................(எ௩)

(அ-கை.) இதுவுமது.

गृहत्वेनैव काष्ठानि खड्गत्वेनैव लोहता ।
विनिर्णीता० ॥ ७४ ॥

கட்டைகள் வீடாகவும், இரும்பு கத்தியாகவும் நிச்சயிக்கப் படுவதுபோல ஆத்மா.................................................(எச)

(அ-கை.) அப்படியானால் வேறுவிதமாய் நிச்சயிப்பதிற் காரணம் யாதெனின் அதனை யறியாமையே யென்று திருஷ்டாந் தத்தோடு பன்னிரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்:—

यथा वृक्षविपर्यासो जलाद्भवति कस्यचित् ।
तद्वदात्मनि देहत्वं पश्यत्यज्ञानयोगतः ॥ ७५ ॥

ஒருவனுக்கு நீரினால் விருக்ஷத்தின் தலைகீழாந்தன்மைத் தோற்ற முண்டாவதுபோல, அஞ்ஞானவசத்தால் ஆத்மாவி னிடத் தேகத்தன்மையைக் காண்கின்றான்..................(எரு)

(அ-கை.) இதுவுமது.

पोतेन गच्छतः पुंसः सर्वं भातीव चंचलं ।
तद्वदा० ॥ ७६ ॥

ஓடத்திற் செல்லும் புருஷனுக்கு யாவும் சஞ்சலமுடை யனவாகத் தோற்றுவதுபோல அஞ்ஞானவசத்தால்.........(எசு)

(அ-கை.) இதுவுமது.

पीतत्वं हि यथा शुभ्रे दोषाद्भवति कस्यचित् ।
तद्वदा० ॥ ७७ ॥

தோஷத்தா லொருவனுக்கு வெண்மையிற் பொன்மை தோற்றுவதுபோல அஞ்ஞானவசத்தால்......................(எஎ)

(அ-கை.) இதுவுமது.

चक्षुर्भ्यां भ्रमशीलाभ्यां सर्वं भाति भ्रमात्मकं ।
तद्वदा० ॥ ७८ ॥

சுழலு மியல்புடைக் கண்களால் யாவும் சுழல்வனவாகக் காணப்படுதல்போல அஞ்ஞானவசத்தால்......................(எஅ)

(அ-கை.) இதுவுமது.

अलातं भ्रमणेनैव वर्त्तुलं भाति सूर्यवत् ।
तद्वदा० ॥ ७९ ॥

கொள்ளிக்கட்டையைச் சுழற்றுவதனாற்றானே சூரியனைப் போல வட்டம் தோற்றுவதுபோல அஞ்ஞானவசத்தால்... (எகூ)

(அ-கை.) இதுவுமது.

महत्वे सर्ववस्तूनामणुत्वं ह्यतिदूरतः ।
तद्वदा० ॥ ८० ॥

எல்லாவஸ்துக்களின் மகத்துவமும் அதிதூரத்தால் அணுத்துவமாகக் காணப்படுவதுபோல அஞ்ஞாவசத்தால்..........(அ௦)

(அ-கை-) இதுவுமது.

सूक्ष्मत्वे सर्वभावानां स्थूलत्वं चोपनेत्रतः ।
तद्वदा० ॥ ८१ ॥

சகல வஸ்துக்களின் சூக்குமத்தன்மையும் உபநேத்திரத்தால் (மூக்குக்கண்ணாடியால்) தூலத்தன்மையாகக் காணப்படுவதுபோல அஞ்ஞானவசத்தால்..........................................(அக)

(அ-கை.) இதுவுமது.

काचभूमौ जलत्वं वा जलभूमौ हि काचता ।
तद्वदा० ॥ ८२ ॥

பளிங்குத்தரையில் ஜலத்தன்மையாவது, ஜலபூமியில் பளிங்குத்தன்மையாவது தோற்றுவதுபோல அஞ்ஞானவசத்தால் .................... (அஉ)

(அ-கை.) இதுவுமது.

यद्वदग्नौ मणित्वं हि मणौ वा वह्निता पुमान् ।
तद्वदा० ॥ ८३ ॥

நெருப்பில் இரத்தினத்தன்மையாவது, இரத்தினத்தில் நெருப்புத்தன்மையாவது புருஷனுக்குத் தோற்றுவதுபோல அஞ்ஞானவசத்தால்................................................(அ௩)

(அ-கை.) இதுவுமது.

अभ्रेषु सत्सु धावत्सु सोमो धावति भाति वै ।
तद्वदा० ॥ ८४ ॥

மேகங்களோடுங்கால் சந்திரனோடுவதாகக் காணப்படுவது போல அஞ்ஞானவசத்தால்......................................(அச)

(அ-கை.) இதுவுமது.

यथैव दिग्विपर्यासो मोहाद्भवति कस्यचित् ।
तद्वदा० ॥ ८५ ॥

ஒருவனுக்கு மோகத்தால் திக்குப்பிரம முண்டாவதுபோல அஞ்ஞானவசத்தால்................................................ (அரு)

(அ-கை.) இவ்வாறு முற்சுலோகங்களாற் கூறப்பட்ட பொருளினை முடிக்கின்றார்:—

यथा शशी जले भाति चंचलत्वेन कस्यचित् ।
तद्वदा० ॥ ८६ ॥

ஒருவனுக்குச் சலசந்திரன் சஞ்சலமுடையதாகக் காணப்படுவதுபோல அஞ்ஞானவசத்தால்..............................(அசா)

(அ-கை.) அத்தியாசத்தினைக் கூறி அப்படியானால் அதன் நிவிருத்தி எதனாலுண்டாமெனின் ஆத்மஞானத்தினாலே யுண்டாமென்று கூறுகின்றார்:—

एवमात्मन्यविद्यातो देहाध्यासो हि जायते ।
एवमात्मपरिज्ञानाल्लीयते च परात्मनि ॥ ८७ ॥

இவ்வாறு ஆத்மாவினிடத்து அவித்தையினால் தேகாத்தியாச முண்டாகின்றது. அதுவே ஆத்மஞானத்தால் பரமாத்மாவில் இலயமாகின்றது. (அஎ)

(அ-கை.) இதனையே விரிக்கின்றார்:—

सर्वमात्मतया ज्ञातं जगत्स्थावरजंगमम् ।
अभावात्सर्वभावानां देहस्य चात्मता कुतः ॥ ८८ ॥

தாவரசங்கமமாகிய சகமுழுவதும் ஆத்மாவாக உணரப்படுகின்றது. சகல பாவங் (இருப்பு) களு மில்லாதன வாகவே, தேகத்திற்கு ஆத்மத்தன்மை யேது? (அஅ)

(அ-கை.) அப்படியானால் ஞானிக்கு நிஷ்பிரபஞ்சவடிவத் தன்மையிருத்தலால் எனக்குண்டாவ தென்னை? ஒருவன் புசித்தலால் மற்றொருவன் திருப்தியடையானே யெனின் அதன் பொருட்டுக் கூறுகின்றார்:—

आत्मानं सततं जानन्कालं नय महाद्युते ।
प्रारब्धमखिलं भुंजन्नोद्वेगं कर्तुमर्हसि ॥ ८९ ॥

மகாமதியே, (காமாதிகளை ஜயித்தலால் உனக்கு இதமான சாதனத்தை நோக்குகிற) ஆத்மாவை * இடைவிடா † தறிந்து கொண்டே காலத்தைக் கழிப்பாயாக. (பின்) பிராரத்த முழுவதையும் புசிப்பவனாய் மனக்கலக்க மடையாதிரு. (அகூ)

(அ-கை.) உண்மையாகவோ பிராரப்தமே யில்லையெனின் போக மேது? போகமில்லாதாகவே மனக்கலக்ககாரண மேது? மனக்கலக்கமே யில்லையெனின் அதனை நீக்குதற்கான உபதேசம் ஏது? என்று வேதாந்த சித்தாந்தத்தின் இரகசியத்தைச் சொல்லுதற்கு ஆசாரியர் பிரதிஞ்ஞை செய்கின்றார்:—

उत्पन्नेऽप्यात्मविज्ञाने प्रारब्धं नैव मुंचति ।
इति यच्छ्रूयते शास्त्रे तन्निराक्रियतेऽधुना ॥ ९० ॥

ஆத்மஞான முண்டானாலும் பிராரப்தம் விடுவதில்லையெனச் சாஸ்திரங்களில் யாது கேட்கப்படுகின்றதோ, அஃதிப்போது நிராகரிக்கப்படுகிறது. ‡ (கூ0)

---

* சுழுத்தி மரணபரியந்தம்.

† வேதாந்தவாக்கியங்களை விசாரித்துக்கொண்டே,

‡ சர்வவிவகாரகாரணமான அஞ்ஞானநிவிருத்தியில் பிராரப்தமில்லை யென்பது பொருள்.

(அ-கை) அதனையே கூறுகின்றார் :—

तत्त्वज्ञानोदयादूर्ध्वं प्रारब्धं नैव विद्यते ।
देहादीनामसत्त्वात्तु यथा स्वप्नो विबोधतः॥ ९१ ॥

விழித்தபின் சொப்பன மில்லாததுபோலத் தத்துவஞானமுதயமான *பின் தேகாதிகள் அசத்தாதலான் பிராரப்த மில்லை. (௯௧)

(அ-கை.) இப்போது பிராரப்தசத்தத்தினை விரித்து முற்கூறியதனை முடிக்கின்றார் :—

कर्म जन्मांतरीयं यत्प्रारब्धमिति कीर्तितम् ।
तत्तु जन्मांतराभावात् पुंसो नैवास्ति कर्हिचित् ॥ ९२ ॥

ஜந்மாந்தர †கர்ம மெதுவோ, அது பிராரப்த மெனப் படும். அதுவோ, ஜன்மாந்தரமின்மையால் புருஷனுக்குச் சிறிது மில்லை. (௯௨)

---

* இங்கு இது விஷயமாம் :—ஜகத்தோற்றம் ௧. இலௌகிகம், ௨. சாஸ்திரீயம், ௩. அநுபவமுள்ளது என்று மூவகைப்படும். அவற்றுள், முதலாவது பாரமார்த்திகம். இரண்டாவது அபரமார்த்திகம் அதாவது வியாவகாரிகம். மூன்றாவது பிராதிபாஸிகம். அவற்றின் நிவிருத்தியோ முறையே வேதாந்தசிரவணமுதலிய மூன்று, சாக்ஷாத்காரம், பிராரப்த க்ஷய மென்பவற்றா லுண்டாகின்றது ; வேறுவிதமா யுண்டாகிறதில்லை. அதில் இங்கு (நூலில்) கூறிய பிரதிஞ்ஞையானது தோற்றத்தை விடுதலின் அபிப்பிராயமாக வென்று அறியத்தக்கதாம்.

† கர்மம் சஞ்சிதம், ஆகாமி, பிராரப்தமென மூவகையாம். அவற்றுள்,

௧. பிற்பிறப்புகளுக்குக் காரணமானது **சஞ்சிதம்.**

௨. நிகழும் உடலிற்போகத்தின் பொருட்டுச் செய்கின்றது **ஆகாமி** (கிரியமாணம).

௩. நிகழும் உடலுக்குக் காரணமானது **பிராரப்தம்.**

அவற்றுள், சஞ்சிதம் ஜன்மாந்திரத்ததேயாயினும் வரும் உடலுக்கு அது பிராரப்தமேயாகும். ஆதலால் இங்குப் பிராரப்தத்தினை ஜன்மாந்தர மென்றார்.

(அ-கை.) முற்கூறிய திருஷ்டாந்தத்தினை விவரிக்கின்றவராய்க் காரணத்தோடு பிறப்பில்லாமையில் யுக்தியினைக் கூறுகின்றார்:—

स्वप्नदेहो यथाऽध्यस्तस्तथैवायं हि देहकः ।
अध्यस्तस्य कुतो जन्म जन्माभावे हि तत्कुतः ॥ ९३ ॥

சொப்பனதேகம்போல இத்தேகமும் அத்தியஸ்தமாம் (கற்பிக்கப்பட்டதாம்). அத்தியஸ்தத்திற்கு ஜன்மமேது? ஜன்மமில்லையேல் பிராரப்தமேது? இல்லையென்றபடி. (௬௩)

(அ-கை.) அப்படியானால் தேகாதிப்பிரபஞ்சம் "**यतो वा इमानि भूतानि जायन्ते** எதனின்றும் இப்பூதங்களுண்டாயினவோ" என்றல் முதலிய சுருதிகளால் சத்தியமாகிய பிரஹ்மத்தினின்று உண்டாகியதாயிருத்தலின் எப்படித் தோற்றமாமெனின் கூறப்படுகின்றது:—

उपादानं प्रपंचस्य मृद्भांडस्येव कथ्यते ।
अज्ञानं चैव वेदांतैस्तस्मिन्नष्टे क्व विश्वता ॥ ९४ ॥

பாண்டத்திற்கு மண்போலப் பிரபஞ்சத்திற்கு அஞ்ஞானமு*முபாதானமென்று வேதாந்தங்களாற் கூறப்படுகின்றது. அது (அஞ்ஞானம்) நசிக்கின் பிரபஞ்சத்தன்மையேது? (௬௪)

* காரணம் உபாதானம் நிமித்தமென இருவகைப்படும். அவற்றுள், ௧. உற்பத்தி ஸ்திதிலயங்களுக்குக் காரணமாவது உபாதானம். ௨ உற்பத்திமாத்திரத்திற்குக் காரணமாவது நிமித்தம்.

இங்கு "**मायांतु प्रकृतिं विद्यात्** மாயையினைப் பிரகிருதியென்றறிக" என்பது வேதாந்தம் (சுருதிமுடிவு-உபநிஷத்) மூலசுலோகத்துள்ள சகாரத்தால் (உம்மையால்) பிரஹ்மம் உபாதானமாம். இங்கு இது தாற்பரியமாம்:—கேவலம் பிரஹ்மமே ஜகத்காரணமாகாது; நிர்விகாரமாயிருத்தலின். கேவலம் அஞ்ஞானமும் ஜகத்காரணமன்று; ஜடமாயிருத்தலால். ஆதலால் இரண்டுங்கூடியே ஜகத்காரணமாம்; **सत्यानृते मिथुनीकरोति** மெய் பொய்யிரண்டினையும் கலக்கச்செய்கின்றான்" என்னும் சுருதியினால்.

இங்குக் கூறப்பட்ட திருஷ்டாந்தத்தில் ஜலஸ்தானத்தில் பிரஹ்மமாம்; பிண்டமாக்குஞ் சாமர்த்தியசமத்தன்மையால். மண் ஸ்தானத்தில் அஞ்ஞானமாம்; மறைக்குந்தன்மைச் சாமியத்தால்.

(அ-கை.) இரண்டும் சேர்ந்தே ஜகத்காரணமா மென்பதனைத் திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார் :—

यथा रज्जुं परित्यज्ज सर्पं गृह्णाति वै भ्रमात् ।
तद्वत्सत्यमविज्ञाय जगत्पश्यति मूढधीः ॥ ९५ ॥

இரஜ்ஜுவைவிட்டு மயக்கத்தாற் சர்ப்பத்தைக் கிரகிப்பதுபோலச் சத்தியத்தை யறியாது மூடபுத்தியானவன் ஜகத்தைக் காண்கின்றான். (௯௫)

(அ-கை.) இப்போது எது சொல்லப்பட்டதோ அது நஷ்டமாயின் விசுவத்தன்மை யேதென்று அதனை விரித்து முற்கூறிய பிராரப்தமின்மையைத் திருஷ்டாந்தத்தோடு முடிக்கின்றார் :—

रज्जुरूपे परिज्ञाते सर्पखंडं न तिष्ठति ।
अधिष्ठाने तथा ज्ञाते प्रपंचः शून्यतां गतः ॥ ९६ ॥

கயிற்றினுருவத்தைக் கண்டகாலத்துச் சர்ப்பம் நிற்பதில்லை. அதுபோல அதிஷ்டானத்தை யறிந்தகாலத்துப் பிரபஞ்சம் சூனியத்தன்மையை யடைகின்றது. (௯௬)

(அ-கை.) முற்பாதி சுலோகத்தால் பிரபஞ்சத்தினின்மையைக் கூறி, பிற்பாதியால் அப்படியானால் ஜீவன்முக்தி வேறுவிதத்தாற் பொருந்தாமையால் "**अत्र ब्रह्म समश्नुते** இங்குப் பிரஹ்மத்தைச் செவ்வையாய்ப் புசிக்கின்றான்." என்னும் இவை முதலிய சுருதிகள் பிராரப்தத்தினை எதன் பொருட்டுக் கூறுகின்றனவெனின் கூறப்படுகின்றது :—

देहस्याऽपि प्रपंचत्वात् प्रारब्धावस्थितिः कुतः ।
अज्ञानिजनबोधार्थं प्रारब्धं वक्ति वै श्रुतिः ॥ ९७ ॥

தேகமும் பிரபஞ்சமாதலான் பிராரப்தஸ்திதி யேது? அஞ்ஞானிகளுக் கறிவித்தற்பொருட்டுப் பிராரப்தத்தைச் சுருதி கூறுகின்றது. (௯௭)

(அ-கை.) அப்படியானால் ஞானிகளுக் கறிவித்தற் பொருட்டுச் சுருதி கூறுகின்றதென்னின் சொல்லப்படுகின்றது:—

क्षीयंते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे ।
बहुत्वं तन्निषेधार्थं श्रुत्या गीतं च यत्स्फुटम् ॥ ९८ ॥

* அப்பராவரத்தை யறியவே இவனது கர்மங்கள் நசிக்கின்றன வென்று சுருதியால் வெளிப்படையாகக் கூறப்பட்ட பன்மையாதோ; அது அதனை (பிராரப்தத்தை) நிஷேதிக்கும்பொருட்டாம். (கூஅ)

(அ-கை.) முற்கூறிய விபரீதத்தன்மையில் பாதகத்தினைக் கூறுகின்றார்:—

उच्यतेऽज्ञैर्बलाच्चैतत् तदानर्थद्वयागमः ।
वेदांतमतहानं च यतो ज्ञानति श्रुतिः ॥ ९९ ॥

அஞ்ஞர்களால் இது (பிராரப்தம்) அவிவேகசாமர்த்தியத்தினால் சத்தியமாகச் சொல்லப்படுகின்றது. அப்போது † இருவகைக்குற்றம் வருதலும், வேதாந்தமதத்திற்குக் கேடும் உண்

---

**भिद्यते हृदयग्रंथिश्छिद्यन्ते सर्वसंशयाः सीयन्ते चस्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे** அப்பராவரத்தைப் பார்க்கவே இருதயக்கிரந்தி (முடிச்சு) கள் பிரிகின்றன. சகல சம்சயங்களும் சிதைகின்றன. இவன் கர்மங்களும் குறைகின்றன" என்பது சுருதி. பரம்-பிரஹ்மலோகாதிபதங்கள்; அவரம்-எதனிற் றாழ்ந்தனவா யிருக்கின்றனவோ, அப்படிப்பட்ட பிரத்தியகபின்ன பரப்பிரஹ்மம் பராவர மெனப்படும்.

† க. பிராரப்தவடிவ துவைதத்தை யங்கீரித்தலில் மோக்ஷமின்மைப் பிரசங்க முண்டாம் என்பது ஒரு தோஷம்.

உ. மோக்ஷமில்லாததாகவே ஞானசம்பிரதாயத்திற்குக் கேடுண்டாதல் வடிவினது இரண்டாவது தோஷம்.

இவை இருவகைக்குற்றம்.

டாகின்றன. ஆதலால் எதனால் ஞான முண்டாகுமோ, ‡ அப்படிப்பட்ட சுருதி கொள்ளத்தக்கதாம். (கூகூ)

(அ-கை.) அது இவ்வாறு இவ்வளவு நூலினால் முக்கியாதிகாரிக்கு வைராக்கியாதி சாதன சதுஷ்டய பூர்வகமான வேதாந்த வாக்கியவிசாரமே பிரத்தியகபின்ன பிரஹ்மாபரோக்ஷஞான வாயிலாக முக்கியமான மோக்ஷகாரண மென்று சொல்லப்பட்டது. இப்போது பலமுறை விசாரித்தும் புத்திமந்தத்தன்மை விஷயப்பற்றுமுதலிய பிரதிபந்தத்தால் அபரோக்ஷஞானம் எவனுக்குப் பிறக்கவில்லையோ அந்த மந்தாதிகாரிக்கு நிர்க்குணப் பிரஹ்மோபாசனையே முக்கியசாதனமாமென் றபிப்பிராயப்பட்டுச் சாதனத்தோடு தியானயோகத்தினைப் பிரதிஞ்ஞை செய்கின்றார் ஆசிரியர்:—

त्रिपंचांगान्यथो वक्ष्ये पूर्वोक्तस्य हि लब्धये ।
तैश्च सर्वैः सदा कार्यं निदिध्यासनमेव तु ॥ १०० ॥

இனிப் பதினைந்து அங்கங்களைக் கூறுவாம், அவை யெல்லாவற்றாலும் முற்கூறியதை யடையும்பொருட்டு எப்போதும் நிதித்தியாசனமே செய்யத்தக்கதாம். (கoo)

(அ-கை.) மந்தாதிகாரியானவன் கர்மம் சகுணோபாசனை விசாரமென்னும் மற்றெல்லாச் சாதனங்களையும் விட்டுச் சிரத்தையோடு ஆசிரியர் உபதேசித்தவண்ணம் நிர்க்குணப்பிரஹ்மத்தினையே உபாசிக்கவேண்டும்:—

नित्याभ्यासादृते प्राप्तिर्न भवेत्सच्चिदात्मनः ।
तस्माद्ब्रह्मनिदिध्यासेज्जिज्ञासुः श्रेयसे चिरम् ॥ १०१ ॥

---

‡ तमेव धीरो विज्ञाय प्रज्ञां कुर्वीत ब्राह्मणः । नानुध्यायाद्बहूञ्छब्दान् वाचो विग्लापनं हि तत् பிரஹ்மமாக இச்சையுள்ளவனாகிய பிராஹ்மணனை விவேகி உபதேசத்தினாலும் சாஸ்திரத்தினாலும் ஆத்மாவை யறிந்து பின் (சாஸ்திராசாரியர்களால் உபதேசிக்கப்பட்ட விஷயமுடையதும் அபரோக்ஷாநுபவபரியந்தமானதும் ஞானவிருப்பத்தை முடிப்பதுமான) பிரஞ்ஞையைச் செய்கின்றான் (கர்மோபாசனைகளைப் பிரதிபாதிக்கும்) வெகுசப்தங்களைச் சிந்திக்கலாகாது. அது (துவைதசாஸ்திரபடனம்) வாக்கிற்கு விசேஷவருத்தமே.” என்பது சுருதி.

நித்தியாப்பியாச மின்றிச் சச்சிதானந்த ஆத்மாவின் அடைவுண்டாகாது. ஆதலான் ஜிஜ்ஞாசு சிரேயசின்பொருட்டுத் தினமும் பிரஹ்மத்தை நிதித்தியாசனஞ் செய்யவேண்டும். (௧0௧)

(அ-கை) அப்படியானல் எவற்றேடுகூட நிதித்தியாசனஞ் செய்தல் வேண்டுமோ அவ்வங்கங்கள் எவை யென்று விரும்பிய விடத்து அவற்றை யுத்தேசிக்கின்றார்:—

यमो हि नियमस्त्यागो मौनं देशश्च कालता ।
आसनं मूलबंधश्च देहसाम्यं च दृक्स्थितिः ॥ १०२ ॥
प्राणसंयमनं चैव प्रत्याहारश्च धारणा ।
आत्मध्यानं समाधिश्च प्रोक्तान्यंगानि वै क्रमात् ॥ १०३ ॥

௧. இயமம், ௨. நியமம், ௩. தியாகம், ௪. மௌநம், ௫. தேசம், ௬. காலம், ௭. ஆசநம், ௮. மூலபந்தம், ௯. தேகசமத்துவம், ௧0. பார்வைநிலை, ௧௧. பிராணயாமம், ௧௨. பிரத்தியாகாரம், ௧௩. தாரணை, ௧௪. ஆத்மத்தியானம், ௧௫. சமாதி என அங்கங்கள் கிரமமாகச் சொல்லப்பட்டன. (௧0௨-௧0௩)

(அ-கை.) இப்போது இவற்றின் ஒவ்வொன்றற்கும் உத்தேசக்கிரமமாக லக்ஷணம் கூறுகின்றார் :—

सर्वं ब्रह्मेति विज्ञानादिंद्रियग्रामसंयमः ।
यमोऽयमिति संप्रोक्तोऽभ्यसनीयो मुहुर्मुहुः ॥ १०४ ॥

சர்வம் பிரஹ்ம மென்னும் விஞ்ஞானத்தால் இந்திரிய சமூகத்தை யடக்குதல் இயம மெனப்படும். இஃது அடிக்கடி அப்பியசிக்கத்தக்கதாம். (௧0௪)

(அ-கை) இவ்வாறு இயமத்தினை இலக்ஷியமாக்கி நியமத்தினை இலக்ஷியமாக்குகின்றார் :—

सयादीयप्रवाहश्च विजातीयतिरस्कृतिः ।
नियमो हि परानंदो नियमात्क्रियते बुधैः ॥ १०५ ॥

* சஜாதீயப்பிரவாகமும் விஜாதீயதிரஸ்காரமும் நியமமாம். நியமத்தினால் விவேகிகளாற் பரமாநந்தம் செய்யப்படுகின்றது. (௧௦௫)

........................

(அ-கை.) இப்போது மூன்றாவதாகிய தியாகத்தினை இலக்ஷியமாக்குகின்றார் :—

त्यागः प्रपंचरूपस्य चिदात्मत्वावलोकनात् ।
त्यागो हि महतां पूज्यः सद्यो मोक्षमयो यतः ॥ १०६ ॥

சிதாத்மத்தன்மை யநுசந்தானத்தால் பிரபஞ்சரூபத்தை விடுதல் எதுவோ, அது தியாகமாம். அது அநுசந்தானகாலத்திலேயே மோக்ஷமய மாதலால் மகத்துக்களால் பூஜிக்கப்படுவதாம். (௧௦௬)

(அ-கை.) இனி மௌனத்தினை இலக்ஷியமாக்குகின்றார் :—

(அ-கை.) ஒருவகை மௌனத்தினைக் கூறி வேறுவகையாக மௌனத்தினைக் கூறுகின்றார் :—

यस्माद्वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह ।
यन्मौनं योगिभिर्गम्यं तद्भवेत्सर्वदा बुधः ॥ १०७ ॥

वाचो यस्मान्निवर्तन्ते तद्वक्तुं केन शक्यते ।
प्रपंचो यदि वक्तव्यः सोपि शब्दविवर्जितः ॥ १०८ ॥

इति वा तद्भवेन्मौनं सतां सहजसंज्ञितम् ।
गिरामौनं तु बालानां प्रयुक्तं ब्रह्मवादिभिः ॥ १०९ ॥

எதனினின்றும் வாக்கானது மனதோடு அடையாது திரும்புகின்றதோ, எம்மௌனம் யோகிகளா லடையத்தக்கதோ, அஃதாகவேண்டு மெப்போதும் அறிஞன் என்பதேனும், அல்லது வாக்கு எதனினின்றும் நிவர்த்தியாகின்றதோ, அதனைச் சொல்ல

---

* இனமாகிய ஆத்மாகார விருத்தியின் தொடர்பும், வேற்றினமாகிய அநாத்மாகார விருத்தியின் நீக்கமும் நியமமாம்.

எவரால் முடியும்? *பிரபஞ்சஞ் சொல்லப்படுமாயின், அது வும் சத்தமின்றியதாம் என்பதேனும் சத்துக்களிடத்துப் பிரசித்த மாகிய மௌநமாம். வாக்குமௌநம் சிறுவர்களுக்கா மென்று பிரஹ்மவாதிகளால் சொல்லப்படுகின்றது. (௧0௭-௧0அ-௧0௯)

(அ-கை.) இப்போது தேசத்தினை இலக்ஷியமாக்குகின்றார்:—

आदावंते च मध्ये च जनो यस्मिन्न विद्यते ।
येनेदं सततं व्याप्तं स देशो विजनः स्मृतः ॥ ११० ॥

ஆதியிலும், அந்தத்திலும், மத்தியிலும் எதில் ஜனங்க ளிருப்பதில்லையோ, எதனால் இது (உலகம்) எப்போதும் வியாபிக் கப்பட்டிருக்கின்றதோ, அத்தேசம் நிர்ஜனப்பிரதேச மெனப் படும். (௧௧0)

(அ-கை.) இனிக் காலத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

कलनात्सर्वभूतानां ब्रह्मादीनां निमेषतः ।
कालशब्देन निर्दिष्टो ह्यखंडानंद अद्वयः ॥ १११ ॥

பிரஹ்மாமுதலியோரின் நிமிஷமுதல் சகல பூதங்களின் சிருஷ்டிஸ்திதி லயங்களுக் காதாரமாயிருத்தலால், அகண்டாநந்த அத்வயம் (பிரஹ்மம்) கால சப்தத்தினாற் சொல்லப்படுகின்றது.

(அ-கை.) ஆசனத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

सुखेनैव भवेद्यस्मिन्नजस्रं ब्रह्मचिंतनम् ।
आसनं तद्विजानियान्नेतरत्सुखनाशनम् ॥ ११२ ॥

---

* சப்தப்பிரவிருத்திநிமித்த மில்லாமையால் பிரஹ்மம் வாக்கிற்கு விஷயமாகாததுபோல நாம ரூப ஜாதியாதி பிரபஞ்சமும் சத்து அல்லது அசத்து என்றல் முதலியனவாகச் சொல்லக்கூடாமையின் வாக்கிற்கதீத மாம். முற்கூறிய மௌநம் பதினைன்காவதங்கமாகிய தியானமாகத் தோற்றுகின்றதெனச் சங்கை யுண்டாமெனக் கருதி இவ்விரண்டாம் மௌநம் சொல்லப்பட்டது.

பிரசித்தமான பிரஹ்மரூப மௌநம் ஆகவேண்டும்.

* எந்தச் சுகவடிவப் பிரஹ்மத்தில் கர்த்தவ்விய அகர்த்தவ்விய சிந்தனம் உண்டாகாதோ, அது நித்தியப் பிரஹ்மாசனமென் றறியத்தக்கதாம். மற்றவை சுகாசன மன்று; சுகத்தைக் கெடுப்பனவாம். (கக௨)

(அ-கை.) பிரசங்கத்தால் (தொடர்பாட்டால்) ஆசன விசேஷத்தினை இலக்ஷயிக்கின்றார் :—

सिद्धं यत्सर्वभूतादिविश्वाधिष्ठानमव्ययम् ।
यस्मिन् सिद्धाः समाविष्टास्तद्वै सिद्धासनं विदुः ॥ ११३ ॥

யாது சகல பூதாதி ஜகத்திற்கும் அதிஷ்டானமான அவ்வியயமோ, அது சித்தமாம். அல்லது எதன்கண் சித்தர்கள் † செவ்வையா யிருக்கின்றார்களோ, அது சித்தாசனமா மென்றறிக. (ககங)

(அ-கை.) இனி மூலபந்தத்தினை இலக்ஷயிக்கின்றார் :—

यन्मूलं सर्वभूतानं यन्मूलंचित्तबंधनम् ।
मूलबंधः सदा सेव्यो योग्योसौ राजयोगिनाम् ॥ ११४ ॥

யாது சகல பூதங்களுக்கும் மூல (காரண)மோ, சித்தத்தின் பந்தனம் எதற்குக் காரணமோ, அது (பிரஹ்மம்) என்றும் சேவிக்கத்தக்க மூலபந்தமாம். இஃது இராஜயோகிகளுக் குரியதாம். (ககச)

(அ-கை.) இப்போது தேகசமத்தன்மையை இலக்ஷயிக்கின்றார் :—

अंगानां समतां विद्यात्समे ब्रह्मणि लीयते ।
नोचेन्नैव समानत्वमृजुत्वं शुष्कवृक्षवत् ॥ ११५ ॥

---

* அல்லது தானேயா யிருக்கின்றார்களோ.

† இது வித்தியாரணியஸ்வாமிகளின் வியாக்கியானுநுசார உரை வேறு உரை இஃதாம் :—

எதன்கண் இடைவிடாப் பிரஹ்மசிந்தனம் சுகமாகவே யுண்டாகுமோ அது (தக்க) ஆசன மென்றறியத்தக்கதாம்; மற்றவை சுகத்தைக் கெடுப்பனவாம்; ஆசன மூன்று.

* அங்கங்களின் சமத்தன்மையை யறியின், அங்கங்களின் விஷமத்தன்மை சமமாகிய பிரஹ்மத்தில் ஒடுங்கும். ஒடுங்க வில்லையாயின் (சமமாகிய பிரஹ்மரூபமாக நிற்கவில்லையாயின்) உலர்ந்த விருக்ஷம்போல் அங்கங்களின் சரளத்தன்மை (நேர்மை) சமானத்தன்மை (தேகசமானத்துவ) மாகாது. (கக௫)

(அ-கை.) இப்போது பார்வையின் நிலையினை இலக்ஷயிக் கின்றார் :—

दृष्टिं ज्ञानमयीं कृत्वा पश्येद्ब्रह्ममयं जगत् ।
सा दृष्टिः परमोदारा न नासाग्रावलोकिनी ॥ ११६ ॥

திருஷ்டியை (அந்தக்கரணவிருத்தியை) ஞானமாக (அகண்ட பிரஹ்மாகாரவிருத்தியாக)ச் செய்து ஜகத்தைப் பிரஹ்மமய மாகக் காண்க. அதுவே பரம உதாரமான திருஷ்டி (பார்வைநிலை) யாம். நாசிநுனியைப் பார்த்தல் திருஷ்டி யன்று. (கக௬)

(அ-கை.) அப்படியானால் இவ்வாறிருக்கினும் பிரவிருத்தி நிமித்தமின்மையால் இந்திரியத்திற்கு விஷயமாகாத பிரஹ்ம வடிவத்தன்மையாகப் பிரத்தியக்ஷமாய் ஜகத்தைக் காணுதல் எப் படியாகும் என்னும் அசுவாரசியத்தினால் வேறு பக்ஷத்தாற் கூறு கின்றார் :—

दृष्टृदर्शनदृश्यानां विरामो यत्र वा भवेत् ।
दृष्टिस्तत्रैव कर्तव्या न नासाग्रावलोकिनी ॥ ११७ ॥

அல்லது † காண்பான் காட்சி காணப்படுபொருள் என்ப வற்றின் இலயம் யாண்டுண்டாகின்றதோ, ஆண்டே திருஷ்டி (அந்தக்கரண விருத்தி)வைக்கத்தக்கதாம். நாசிநுனியைப் பார்த் தல் திருஷ்டி யன்று. (கக௭)

---

* பிரஹ்மத்தி லத்தியஸ்தமான ஸ்வபாவவிஷமங்களாகிய அங்கங்க ளின் அதிஷ்டான சமத்தன்மைத் திருஷ்டியினால் சமத்தன்மையை.

† காண்பான்முதலியன கேட்பான்முதலிய எல்லாத்திரிபுடிகளுக்கும் உபலக்ஷணம்.

(அ-கை.) இனிப் பிராணாயாமத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

चित्तादिसर्वभावेषु ब्रह्मत्वेनैव भावनात् ।
निरोधः सर्ववृत्तीनां प्राणायामः स उच्यते ॥ ११८ ॥

* சித்தமுதலிய சர்வ பாவங் (இருப்பு) களிலும் பிரஹ்மத் தன்மையாகவே பாவித்தலாற் சகல விருத்திகளையும் நிரோதித்தலெதுவோ, அது பிராணாயாம மெனப்படும். (கக அ)

(அ-கை.) இப்பிராணாயாமத்தினை அரைச்சுலோகத்தால் தன்னபிப்பிராயப்படி இரேசகமுதலிய மூன்று பிரிவாக இலக்ஷயிக்கின்றார்:—

निषेधनं प्रपंचस्य रेचकाख्यः समीरणः ।
ब्रह्मैवास्मीति या वृत्तिः पूरको वायुरीरितः ॥ ११९ ॥

பிரபஞ்சத்தை நிஷேதித்தல் இரேசகமேன்னும் வாயுவாம். பிரஹ்மமே யானென்ற விருத்தி யாதோ, அது பூரகவாயு வெனப்படும். (ககக)

(அ-கை.) கும்பகத்தினைக் கூறி, அப்படியானால் இம்மூவகைப் பிராணாயாமமும் ஓரிடத்தும் கேட்கப்படவில்லையே யென்னும் விருப்பத்து அதில் அதிகாரியினை அரைச்சுலோகத்தாற் கூறுகின்றார்:—

ततः सद्वृत्तिनैश्चल्यं कुंभकः प्राणसंयमः ।
अयं चाऽपि प्रबुद्धानामज्ञानां घ्राणपीडनम् ॥ १२० ॥

அதன்பின், அவ்விருத்தியின் நிச்சலத்தன்மை கும்பகப் பிராணாயாமமாம். இது விவேகிகளுக்காம், மூக்கைப் பிடித்தல் அஞ்ஞர்களுக்குத் தகுதியாம். (க௨0)

---

* பிராணன் சித்தத்தின் வசத்ததாயிருத்தலின் சித்தநிரோதத்தினாலேயே பிராணநிரோதமுண்டாம். அதுவே இங்குக் கொள்ளப்பட்டது.

(அ-கை.) இனிப் பிரத்தியாகாரத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

विषयेष्वात्मतां दृष्ट्वा मनसश्चिति मज्जनं ।
प्रत्याहारः सविज्ञेयोऽभ्यसनीयो मुमुक्षुभिः ॥ १२१ ॥

* விஷயங்களில் ஆத்மத்தன்மையை யறிந்து மனம் † சித்தில் அழுந்துதல் பிரத்தியாகார மென்று அறியத்தக்கதாம். அது முமுக்ஷுக்களால் அப்பியசிக்கத்தக்கதாம். (கஉக)

(அ-கை.) தாரணையை இலக்ஷயிக்கின்றார்:—

यत्र यत्र मनो याति ब्रह्मणस्तत्र दर्शनात् ।
मनसो धारणं चैव धारणा सा परा मता ॥ १२२ ॥

எங்கெங்கு மனஞ் செல்லுகின்றதோ, அங்கங்குப் ‡ பிரஹ்மத்தைக் காண்டலால் மனதை நிறுத்துதல் எதுவோ அது § மேலாகிய தாரணை யென்று மதிக்கப்படுகின்றது. (கஉஉ)

(அ-கை) ஆத்மத்தியானத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

ब्रह्मैवास्मीति सद्वृत्या निरालंबतया स्थितिः ।
ध्यानशब्देन विख्याता परमानंददायिनी ॥ १२३ ॥

பிரஹ்மமே யான் என்னும் ¶ சத்விருத்தியினால் $ நிராலம்பத்தன்மையாக நிற்றல் எதுவோ, அது பரமாநந்தத்தைத் தருவதாய்த் தியானசத்தத்தால் சொல்லப்படுகின்றது. (கஉ௩)

(அ-கை.) இனிக் கடைசியான சமாதிவடிவ பதினைந்தாவது அங்கத்தினை இலக்ஷயிக்கின்றார்:—

निर्विकारतया वृत्या ब्रह्माकारतया पुनः ।
वृत्तिविस्मरणं सम्यक् समाधिर्ज्ञानसंज्ञकः ॥ १२४ ॥

---

* கடமுதலிய அல்லது சத்தமுதலிய விஷயங்களில் உடன்பாடு எதிர்மறைகளால் ஆத்மத்தன்மையை.

† நாமரூபக்கிரியைகளின் அநுசந்தானமின்றிச் சிற்சொருபமாக நிலைத்தல்.

‡ நாமமுதலியவற்றின் உபேக்ஷையால் சத்தாதிமாத்திரமான பிரஹ்மத்தை.

§ ஆறுதாரங்களுள் ஒன்றன்கண் வைத்தலாகிய தாரணை பிரசித்தமானதாயினும் இங்குச் சொல்லப்பட்ட லக்ஷணமுடைய தாரணை தத்துவஞானமுடையோரால் மதிக்கப்பட்ட மேலானதாம்.

¶ வேறு பிரமாணங்களால் பாதிக்கப்படாத விருத்தியினால்.

$ தேகாதி யநுசந்தானமின்றியதன்மை.

* நிர்விகாரத்தன்மைவிருத்தியினால் மீண்டும் பிரஹ்மாகாரத் தன்மையாகச் § செவ்வனே தியேயாகாரவிருத்தி சூனியமாயிருத்தல் (துவைதாநுசந்தான மின்மை) எதுவோ, அது ஞானமெனப் பெயரிய $ சமாதியாம். (௧௨௪)

(அ-கை.) இப்போது எதன் பொருட்டு அங்கத்தோடு இந்நிதித்தியாசனம் சொல்லப்பட்டதோ அதனைக் கூறுகின்றார்:—

इमं चाकृत्रिमानंदं तावत्साधुः समभ्यसेत् ।
वश्यो यावत्क्षणात्पुंसः प्रयुक्तः सन्भवेत्स्वयम् ॥ १२५ ॥

இந்தச் சுவசொரூபாநந்தத்தை விளக்கும் ¶ நிதித்தியாசனமும், எந்தக்ஷணம் வரையில் புருடன் லக்ஷியத்தில் பொருத்தப்பட்டவனாய்த் தானே வசிய (தன்மய) னாகின்றானோ, அது வரையிற் செவ்வையாக அப்பியசிக்கப்படவேண்டும். (௧௨௫)

(அ-கை.) இவ்வாறு அப்பியசிக்கப்பட்டதின் பயனைக் கூறுகின்றார் :—

ततः साधननिर्मुक्तः सिद्धो भवति योगिराट् ।
तत्स्वरूपं न चैतस्य विषयो मनसो गिराम् ॥ १२६ ॥

அதன்பின் சாதன மின்றியவனாய் யோகீசுவரன் சித்தனாகின்றான், இந்த யோகிக்கு அதுவே (வேதாந்தப்பிரசித்தப்பிரஹ்மமே) சொரூபமாம்; இவனுடைய மனத்திற்கும் வாக்கிற்கும் விஷயமாதலில்லை. (௧௨௬)

(அ-கை.) இச்சமாதிபரியந்தமான யோகம் பெரும்பயனுடையதாயினும் இலேசான தென்று அநாதரஞ் செய்யலாகாதென்று இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார் :—

समाधौ क्रियमाणेतु विघ्नान्यायांति वै बलात् ।
अनुसंधानराहित्यमालस्यं भोगलालसं ॥ १२७ ॥

---

* விஷயாநுசந்தானமின்றிய அந்தக்கரணவிருத்தியினால்.

§ செவ்வனே-பிரபஞ்சசம்ஸ்காரமின்றி.

$ "**समाधिः संविदुत्पत्तिः परजीवैकतां प्रति** பரஜீவ ஐக்கியத்தைக் குறித்து ஞானமுண்டாதல் சமாதியாம்." என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

¶ உம்மையால் யுக்திக்கியன்ற வேதாந்தவிசாரமும் கொள்ளப்படும்.

लयस्तमश्च विक्षेपो रसास्वादश्च शून्यता ।
एवं यद्विघ्नबाहुल्यं त्याज्यं ब्रह्मविदा शनैः ॥ १२८ ॥

சமாதி செய்யுங்கால் விக்கினங்கள் வலிய வரும். அநுசந்தானமின்மை, ஆலசியம். போகவிச்சை, இலயம் (நித்திரை), * தமசு, † விக்ஷேபம், ‡ ரஸாஸ்வாதம், ¶ சூநியத்துவம் என்று இவ்வாறு வரும் விக்கினமிகுதியைப் பிரஹ்மவித்துக்கள் மெல்ல விடவேண்டும். (கஉஎ-கஉஅ)

(அ-கை.) விருத்தியே பந்தமோக்ஷகாரணமா மென்று கூறுகின்றார்:—

भाववृत्त्या हि भावत्वं शून्यवृत्त्या हि शून्यता ।
ब्रह्मवृत्त्या हि पूर्णत्वं तथा पूर्णत्वमभ्यसेत् ॥ १२९ ॥

$ பாவவிருத்தியினால் பாவத்துவமும், சூநிய (அபாவ) விருத்தியினால் சூநிய (ஜட) த்துவமும் உண்டாவது உலகப்பிரசித்தம். அதுபோலப் பிரஹ்மவிருத்தியினால் பூரணத்துவம் உண்டாவது ஞானிகளிடத்தும் பிரசித்தம். ஆதலால் பூரணத் தன்மையபை அப்பியசிக்கவேண்டும். (கஉகூ)

(அ-கை.) அதில் பிரஹ்மவிருத்தியைத் துதித்தற்பொருட்டுப் பிற விருத்திகளை நிந்திக்கின்றார்:—

ये हि वृत्तिं विहायैनां ब्रह्माख्यां पावनीं परां ।
वृथैव ते तु जीवंति पशुभिश्च समा नराः ॥ १३० ॥

எவர்கள் இந்த மேலான பரிசுத்தமாகிய பிரஹ்ம மென்னும் விருத்தியை விடுகின்றார்களோ, அப்பசுக்களுக்குச் சமமான நரர்கள் வீணாகவே ஜீவிக்கின்றார்கள். (கந௦)

---

* தமசு-காரியாகாரிய அவிவேகம்.

† விக்ஷேபம்-விஷயம் தோற்றுதல்.

‡ ரஸாஸ்வாதம்-தன்னியன் யானென்றல்முதலிய ஆநந்தவடிவவிருத்தி.

¶ சூநியத்துவம் கஷாயம் அதாவது ராகத்துவேஷாதி தீவிரவாசனையினால் சித்தம் ஸ்தம்பித்தல்.

$ பாவவிருத்தியினால்=கடாதியாகாரவிருத்தியினால்; பாவத்துவமும்=தன்மயத்துவமும்.

(அ-கை.) இப்போது பிரஹ்மவிருத்தியினைத் துதிக்கின்றார் :—

ये हि वृत्तिं विजानंति ज्ञात्वापि वर्द्धयंति ये ।
ते वै सत्पुरुषा धन्या वंद्यास्ते भुवनत्रये ॥ १३१ ॥

எவர்கள் இவ்விருத்தியை யறிகின்றார்களோ, அறிந்து எவர்கள் விருத்தி (யதிகரிக்கச்) செய்கின்றார்களோ, அவர்களே சத்புருஷர்கள்; தன்னியர்கள்; மூவுலகத்திலும் பூஜிக்கப்படுபவர்கள். (கங்க)

(அ-கை.) துதிக்கப்படுந்தன்மையிற் காரணத்தைக் கூறுகின்றார்:—

येषां वृत्तिः समा वृद्धा परिपक्वा च सा पुनः ।
ते वै सद्ब्रह्मतां प्राप्ता नेतरे ब्रह्मवादिनः ॥ १३२ ॥

எவர்களுடைய விருத்தி சமமாயும், விருத்தி யடைந்த (அதிகரித்த) தாயும், பரிபக்குவமானதாயு மிருக்கின்றதோ, அவர்களே சத்தாகிய பிரஹ்மத்தை யடைந்தோர்; சப்தவாதிகளாகிய மற்றயோ ரடைந்தவரல்லர். (கங௨)

(அ-கை.) அச்சப்தவாதிகளையே நிந்திக்கின்றார் :—

कुशला ब्रह्मवार्तायां वृत्तिहीनाः सुरागिणः ।
तेप्यज्ञानतमा नूनं पुनरायांति यांति च ॥ १३३ ॥

பிரஹ்மத்தைப் பற்றிப் பேசுவதில் சமர்த்தர்களாயும் நல்ல ராகமுள்ளவர்களாயு முள்ளவர்கள் எவர்களோ, அவர்கள் அஞ்ஞானிகளாய் நிச்சயமாக வருகின்றார்கள்; போகின்றார்கள். (கஙங)

(அ-கை.) இதுவுமது.

निमषार्द्धं न तिष्ठंति वृत्तिं ब्रह्ममयीं विना ।
यथा तिष्ठंति ब्रह्माद्याः सनकाद्याः शुकादयः ॥ १३४ ॥

பிரஹ்மாதியரும், சனகாதியரும், சுகர்முதலியோரும் இருப்பது போலப் பிரஹ்மமயமாகிய விருத்தியின்றி அரை நிமிஷமும் நிற்பதில்லை. எப்போதும் பிரஹ்மமயமான விருத்தியோடு இருக்கின்றாரென்பது பொருள். (கஙச)

(அ-கை.) இவ்வாறு தாம்கொண்ட சுருதிமுடிவிலுள்ள இராஜயோகத்தின் அங்கத்தோடு கூறி முன் தொடங்கிய சாங்கிய வேதாந்த விசாரத்தினை ஐந்து சுலோகங்களால் முடிக்கின்றார் :—

कार्ये कारणता याता कारणे न हि कार्यता ।
कारणत्वं ततो नश्येत् कार्याभावे विचारतः ॥ १२५ ॥

* காரியத்தில் † காரணத்தன்மை வருகின்றது ; காரணத்தில் காரியத்தன்மை வருவதில்லை. ஆதலால் $ விசாரத்தினால் காரியத்தன்மை இல்லாததாகவே காணத்தமை பொய்யாகின்றது. (௧௨௫)

(அ-கை.) இதுவுமது.

अथ शुद्धं भवेद्वस्तु यद्वै वाचामगोचरम् ।
*द्रष्टव्यं मृद्घटेनैव दृष्टांतेन पुनः पुनः ॥ १२६ ॥

பின்னர் (காரிய காரணத்தன்மையின் நீக்கத்தில்) வாக்கிற் கெட்டாத சுத்த வஸ்து எதுவோ, அது வாகின்றான். மண் குட திருஷ்டாந்தத்தினால் (வேற்றுமை தோன்றுவண்ணம்) அடிக்கடி காணவேண்டும். (௧௨௬)

(அ-கை.) இந்த விசாரம் ஞானசாதனமாத்திர மன்று; தியானசாதனமுமா மென்று கூறுகின்றார் :—

*अनेनैव प्रकारेण वृत्तिर्ब्रह्मात्मिका भवेत् ।
उदेति शुद्धचित्तानां वृत्तिज्ञानं ततः परम् ॥ १२७ ॥

இவ்விதத்தினாலே விருத்தி பிரஹ்மவடிவ மாகின்றது. அதன்பின் சுத்தசித்தமுள்ளார்க்குப் பிரஹ்மாகாரவிருத்தி ஞானம் உதிக்கின்றது. (௧௨௭)

---

* கடபடாதிவடிவ விகாரத்தில்.

† மண்டன்மைமுதலியவடிவ சர்வவிகாராதிஷ்டானத்துவம்.

$ இத்திருஷ்டாந்தத்தினைப்போலத் தார்ஷ்டாந்தத்திலும் சத்திய ஞானதிவடிவப் பிரஹ்மத்திற்குக் காரணத்தன்மை வருகின்றது; பிரஹ்மத்தில் ஆகாசாதிகாரியத்தன்மை யில்லை. ஆதலால் பரமார்த்தமாக ஆகாசாதிகள் இல்லாதாகவே பிரஹ்மத்திற்குக் காரணத்தன்மையு மில்லை யென்பது பொருள்.

(அ-கை) அவ்விசாரத்தினையே இரண்டு சுலோகங்களால் விரிக்கின்றார் :—

*कारणं व्यतिरेकेण पुमानादौ विलोकयेत् ।
*अन्वयेन पुनस्तद्धि कार्ये नित्यं प्रपश्यति ॥१३८॥

புருஷன் ஆதியில் காரணத்தை வெதிரேகமாக (காரியமின்றியதாக) விசாரிக்கக்கடவன். மீண்டும் அக்காரணத்தை அந்வயத்தால் காரியத்திலும் நித்தியமாகக் காண்கின்றான். ()

(அ-கை.) இதுவுமது.

*कार्ये हि कारणं पश्येत् पश्चात्कार्यं विसर्जयेत् ।
*कारणत्वं ततो गच्छेदवशिष्टं भवेन्मुनिः ॥ १३९ ॥

அல்லது ஆதியில் காரியத்தில் காரணத்தைப் பார்க்க; பின்னர்க் காரியததை நீக்கிவிடுக. அதனால் (காரியத்தை விடுவதால்) காரணத்தன்மை தானே போய்விடுகின்றது. போகவே மிஞ்சியதா (சச்சின்மாத்திரமா) கின்றான், முநி (மனனசீலன்).

(அ-கை.) விசாரத்தாற்றோன்றிய அபரோக்ஷஞானத்தால் முநிக்குப் பிரஹ்மத்துவம் வேறுவிதமாயிருந்த வஸ்துவிற்கு உண்மையில்லை) உண்டாகுக. ஆனால் அபரோக்ஷஞானமாத்திரத்தால் எப்படி யுண்டாகுமென் றுசங்கித்துத் தீவிரபாவனையினால் பரோக்ஷஞானத்தாலும் பிரஹ்மத்துவ முண்டா மென்று திருஷ்டாந்தத்தோடு கூறுகின்றார் :—

भावितं तीव्रवेगेन यद्वस्तु निश्चयात्मना ।
*पुमांस्तद्धि भवेच्छीघ्रं ज्ञेयं भ्रमरकीटवत् ॥ १४० ॥

* நிச்சயபுத்தியுடையவனால் எந்த வஸ்து தீவிர வேகமாய் (இரவும்பகலும்) பாவிக்கப்படுகின்றதோ, அந்த † ஞேயவஸ்துவாகின்றான் ; ‡ பிரமரகீடம்போல. (௧௪௦)

---

* பரோக்ஷஞானத்தினால் பிரமாதாவிலுள்ள ஆவரணம் நீங்கினும் பிரமேயத்திலுள்ள ஆவரணம் நீங்குகிறதில்லை அங்ஙன்மாயினும்,

† ஞேயவஸ்து-அபரோக்ஷமா யறியத்தக்க பிரஹ்மம்.

‡ பிரமரகீடம்போல பிரமரமாகிய வண்டினால் ஓரிடத்திருந்து கொண்டுவந்து உயிரோடு அதன் கூட்டில் வைக்கப்பட்ட புழுவானது பயத்தினால் வண்டைத் தியானித்து, அதன்வடிவேயாய்விடுகின்றது; அதுபோல வென்பதாம்.